விலை சதம் 70 ★ பக்கங்கள் — 10

மலிவு விற்பனை
நல்ல இன
முந்திரிகைக் கன்றுகள்
விற்பனைக்குண்டு.
அண்ணா பாம்
இணுவில்


# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR


-4-1981

புத்தாண்டு வாழ்த்து!
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது உள்ளம்
நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக.
மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு
ஆதரவு பெருகுதல் நாட்டின
நற்பணிகளுக்கேபயன்படுகிறது
மில்க்வைற்-யாழ்ப்பாணம்

மலர் 23 பங்குனி 30 ஜ. ஆகிர் 6 ஞாயிற்றுக்கிழமை (12—4—81) இதழ் 61

### விசாரணையில் மேலும் பல தகவல்கள்:

# 'குட்டிமணிக்கு' தமிழ்நாட்டில் ஒன்றுக்குமேற்பட்ட காதலிகள்!

## எம். பி. பி. எஸ். போலி சான்றிதழ் வைத்து 'கிளினிக்' நடத்தினாராம்

### குடும்பமும் தமிழக கிராமத்தில்

(யாழ்ப்பாணம்)

குட்டிமணியின் குடும்பத்தினர் தமிழ்நாட்டில் உள்ள ஒரு கிராமத்தில் இருப்பதாகவும், தமிழ்நாட்டில் குட்டிமணிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காதலிகள் இருப்பதாகவும் பொலிசார் இது வரை நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளதாக அறியப்படுகிறது.

விசாரணையின்போது இன்ஸ்பெக்டர் பத்மநாதனைக் கொலை செய்ததாகக் கூறப்படும் இளைஞருக்கும், குட்டிமணிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளதாகவும், அந்த இளைஞர் முக்கிய புள்ளியாகக் கருதப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

அந்த முக்கிய புள்ளி இலங்கையிலேயே இருப்பதாகப் பொலிசார் நம்புவதால் அவனைப் பிடிப்பதில் பொலிசார் வலைவிரித்துள்ளனர் எனத் தெரியவருகிறது. அந்த முக்கிய புள்ளி கைதுசெய்யப்படும் பட்சத்தில்வடபகுதி கொள்ளை சம்பவங்கள் யாவற்றுக்கும் அப்புத்துலங்கிவிடும் என பொலிஸ் வட்டாரங்கள் நம்புகின்றன.

### தங்கத் தகடுகளாக

வடக்கில் கொள்ளையடிக்கப் பட்ட பணத்தில் பெரும்பகுதி தங்கத் தகடுகளாகவும், வெளி நாட்டு கரன்சிகளாகவும் இங்கிருந்துதமிழ் நாட்டிற்கு குட்டிமணி கடத்திச் சென்றுள்ளாரென்றும் அங்கு பெரும் உல்லாச ஹோட்டல்களில் பெரும் மனிதராக வாழ்ந்துவந்து உள்ளாரென்றும் பொலிஸ் விசாரணையில் மேலும் தெரிய வந்துள்ளது.

### டாக்டர் பட்டம்

குட்டிமணியிடம் இலங்கையில் எம், பி. பி.எஸ். பட்டம் பெற்ற போலிச்சான்றிதழ் ஒன்று இருந்ததாகவும். இதனை வைத்துக்கொண்டு தமிழ் நாட்டில் ஒரு வைத்திய நிபுணராக நடித்துவந்தாரென்றும், அங்கு இவருக்கு 'கிளினிக்' ஒன்று இருந்ததாகவும் தெரிய வந்திருக்கிறது.

### இந்தியப் பிரஜையாகி

குட்டிமணிக்கு எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் எவ்விதத் தொடர்பும் இருந்திருக்கவில்லையெனத் தெரியவந்துள்ளது.

கொள்ளை அடித்தபணத்தை சேகரித்து அவற்றை இந்தியாவிற்குகடத்திச் சென்று, இந்தியப் பிரஜையாகி அங்கேயே வாழ்வதே இவரதுநோக்கமாக இருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவருடன் மிக நெருங்கியகாலத் தொடர்புள்ளவர்கள் சுமார் 15 பேர் வரை இருக்கலாம் என்றும், இவர்கள் கொள்ளைகளில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் எனவும் பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

### 50 வாலிபர் உதவி

கொள்ளை தொடர்பான வேலைகளுக்குச் சுமார் 50 வாலிபர்களை இவர் காலத்திற்குக்காலம் பயன்படுத்திவந்திருக்கலாம் என்பதும் விசாரணையில் தெரியவந்திருக்கிறது வடபகுதியில் கடந்த 7 வருடகாலமாக நடைபெற்ற

(10-ம் பக்கம் பார்க்க)



நேற்று அதிகாலையில மகாசமாதி அடைந்த நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் புனித உடல் பக்தர்களின் தரிசனத்துக்காக ஆதீனத்தில் வைக்கப்பட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்.

# பரமாசாரிய சுவாமிகள் மகா சமாதியடைந்தார்

## பெருந்திரளான மக்களின் 'அரோகரா' கோஷத்துடன் புனித உடல் சமாதி

(யாழ்ப்பாணம்)

சிவபதமடைந்த நல்லைஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய ஸ்வாமிகள் நேற்று இரவு 7-30 மணியளவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அரோகரா என்று கதறியழ நல்லை ஞானசம்பந்தர் ஆதீன வளவினுள் சமாதி நிலையடைந்தார்.

சுவாமிகள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு தாவடி பத்திரகாளி அம்மன் ஆலயத்திலும், நாச்சிமார் கோவில் அப்பாள் ஆலயத்திலும் கதாப்பிரசங்கங்களை நடாத்திவிட்டு இரவு 12 மணியளவில் ஆதீனத்தில் பாராயணம் செய்துவிட்டு நேற்று சனிக்கிழமை நடைபெறவிருந்த கண்ணுமலைச்செட்டியார் நூற்ருண்டையொட்டி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவதற்கு தயார் செய்து கொண்டிருக்கும்போது வாந்தியெடுத்தார். சுவாமிகளை ஆதீன சிவாச்சாரியார்கள் தனியார் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும்போது வழியில் சுவாமிகள் இரவு 2 மணியளவில் பரிபூரணமடைந்துவிட்டார்.

தமது 18 வயதில் சுவாமிகள் தமது சமயப்பணியை நல்லை சிவன்கோவிலில் ஆரம்பித்தார்

(10ம் பக்கம் பார்க்க)

விசேட பண்டிகையை முன்னிட்டு
பாட்டா பாதணிகள்
மலிவு விற்பனை
எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்
யாழ்ப்பாணம். போன்: 284

இதோ ஓர் நற்செய்தி!
ரூபா ஒன்று மாத்திரம்
மிற்ரு
கொப்பியிங் சேர்விஸ்
MITA COPYING SERVICE

நகரின் மத்தியில் நவீன இயந்திரம்
எல்லா அளவிலும் போட்டோ ஸ்ரற் பிரதிகளையும்
ஒரே நிமிடத்தில் அழகாகவும் தெளிவாகவும்
போட்டோ ஸ்ரற் செய்துகொள்ள இன்றே நாடுங்கள்
சன்லைட்
றைக்கிளினேர்ஸ்
(பஸ்நிலையம் முன்பாக) 23. மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் (8770)

## தவக்கால நற்சிந்தனை

### குருத்துஞாயிறு அல்லது திருப்பாடுகளின் ஞாயிறு

இன்று ஞாயிற்றுக்கிழமை. திருவழிபாட்டின்படி இன்றைய தினத்தைக் குருத்து ஞாயிறு அல்லது திருப்பாடுகளின் ஞாயிறு என்று அழைக்கப்படும். குருத்து ஞாயிறு ஏனெனில் இன்றைய வழிபாடு குருத்தோலைப் பவனியுடன் ஆரம்பமாகிறது. திருப்பாடுகளின் ஞாயிறு என்று அழைக்கப்படுவதன் காரணம் யாதெனில் இன்று தொடக்கம் சனிக்கிழமை வரை கிறிஸ்துவ மக்கள் யாவரும் இயேசுவின் பாடுகளை வாசிக்கவும், சிந்திக்கவும் தூண்டப்படுகிறார்கள். இவ்வாரத்தில் வரும் வெள்ளியைத் திருப்பாடுகளின் வெள்ளி என்று சிறப்பாக அழைக்கப்படுவதும் உண்டு.

#### பவனி

இயேசு தனது இவ்வுலக வாழ்வின் இறுதி முறையாக யெருசலேம் நகருக்குள் வருகிறார். இது பாஸ்கா விழாவின் காலம். எனவே பல்லாயிரக்கணக்கில் மக்கள் ஜெருசலேமில் கூடுவர் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி இயேசு அங்கு குழுமியிருந்த மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். எவ்வாறெனில் பொதுவாக ஜெருசலேம் செல்லும் திருப்பயணிகள் நடந்தே செல்லுகையில், இயேசுவோ ஒரு கழுதைக் குட்டியின் மேல் ஏறிக் கூட்டம் புடைசூழச் செல்கிறார். இதன்வழியாகத்தான் வாக்குப்பண்ணப்பட்ட மெசியா என்று அங்கு வந்தோருக்கு வெளிப்படுத்துகிறார். ஏனெனில் இறைவாக்கினர் சக்கரியாஸ் ஒன்பதாம் அதிகாரத்தில் மெசியாவைப் பற்றிக் கூறுகையில் குறிப்பிடுகின்றார்: 'நீதியும், வெற்றியும் பெற்றுக்கொண்ட அந்த வீரர் எளியவர், கழுதையின் மேலும்... அமர்ந்துவருகிறார்'' என்று எனவே அவர் ஒரு அரசன் போலக் குதிரையிலே வராமல், அன்பே உருவான ஆன்மீகத் தலைவனைப் போல, தாழ்வுக்குரிய கழுதை மேல் ஏறிப் பவனி வருகிறார். அவரது பவனி இறுதியில் கல்வாரியில் முடிவடைகிறது

மிகவும் ஆரவாரத்துடன் ஓசன்னா. பாடல்களுடன், ஆர்ப்பரிப்புகளுடன் வந்த இயேசு வாரத்தின் இறுதியில் பாடுகளுடனும் வேதனைகளுடனும் தமது மீட்பின் பணியை நிறைவேற்றுகிறார். ஆம். இயேசு ஒரு வெறும் மெசியா அல்ல. துன்புறும் மெசியாவாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தார். எனவே மீட்பின் வரலாற்றில் மிகவும் முக்கிய நிகழ்ச்சிகள் இவ்வாரத்தில் நினைவு கூரப்படவிருக்கின்றன. நாமும் ஆரவாரத்துடன் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு இவ்வாரத்தை ஆரம்பித்து இயேசுவின் திருப்பாடுகளை வாசித்துச் சிந்திப்போம். மீட்பின் நிகழ்ச்சியுடன் ஒன்றிப்போம்.

--அருட்திரு மேரி பஸ்ரியன்

---


**Sri Senpaga Vinayagar Temple**

19, CEYLON ROAD,
KATONG,
SINGAPORE-15

**சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம் (S C T A)**
**ஸ்ரீ செண்பக விநாயகர் கோவில்**
**சிங்கப்பூர்**

## தேவை

### பிரதம குருக்கள்

1. வயது 40க்கு மேல், 45க்குள்
2. குடும்பப் பொறுப்பு அதிகம் இல்லாதவராயும், தேகாரோக்கியமுள்ளவராயும்
3. கொடியேற்று மகோற்சவம், திருமணம், மற்றும் முகூர்த்தங்கள் நடாத்த அனுபவமுள்ளவராயும்
4. சமய விளக்கங்களை விளக்கக்கூடியவராயும்
5. செந்தமிழ்ப்பும், நல்லொழுக்கமுமுடையவராயும்
6. உதவி அர்ச்சகர் செய்ய முடியாதிருக்கும் நேரத்தில் அவர் செய்யும் மடப்பளி வேலைகளையும் கவனிக்கக்கூடியவராயும் இருத்தல்வேண்டும்.
7. சம்பளம்:- மாதம் 100 வெள்ளி. அத்துடன் அர்ச்சனையில் 70 விழுக்காடு (அர்ச்சனைக்குள்ள பொருள்கள் உட்பட) வெளி வருமானங்களில் 80 விழுக்காடு (மாத வருமானம்: 800 வெள்ளிக்குக் குறையாமல் கிடைக்கும். ரூ. 6800/-)

### உதவி அர்ச்சகர்

1. வயது 30க்கு மேல் 40க்குள்
2. குடும்பப் பொறுப்பு அதிகம் இல்லாதவராயும், தேகாரோக்கியமுள்ளவராகவும்
3. பிரதம அர்ச்சகர் தன் கடமையைச் செய்ய இயலாத நேரத்தில் அவரின் கடமைகளை ஆற்றக்கூடியவராயும்
4. மடப்பளி வேலைகளை செவ்வனே செய்யக்கூடியவராயும்
5. விழாக்காலங்களில் பிரசாதம் போடவும்.
6. கருமாதி, துவஷம் போன்ற கிரிகைகளைச் சரிவரச் செய்யவும்
7. பார்வைக்கு செந்தளிப்பும், நல்லொழுக்கமுமுடையவராயும்
8. வேதம் வாசிக்கக்கூடியவராயும் இருத்தல்வேண்டும்.
9. சம்பளம்: மாதம் 200 வெள்ளி, அத்துடன் அவரின் வெளி வருமானத்தில் 80 விழுக்காடு. மாத வருமானம் 400 வெள்ளிக்குக் குறையாமல் கிடைக்கும் (ரூ 3400/-)

தங்குமிட வசதி உண்டு.

உடன் தொடர்புகொள்ளவும்

**கௌரவ தனாதிகாரி,**
சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம்,
C/o சபா. சின்னத்தம்பி,
லக்ஸ்மிஸ்தான்.
மருதனாமடம்,
சுன்னாகம்.
தொலைபேசி: சுன்னாகம்:307

8856


---

# வரி விளம்பரம்

## தேவை

நீவைன்டிங், வயரிங், பைப் பிற்றிங் முதலிய வேலைகள் செய்வதில் அனுபவமிக்க ஆள் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: மூனீஸ்வர் பவர்வேக்ஸ், 360 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 8857

எலக்ரோ பிளேற்றிங் வேலையில் 5 வருட அனுபவமுள்ள பொலிசேஸ் (Polishers) இரண்டு நற்சான்று இதழ்களுடன் 20-4-81 க்கு முன் மனுச்செய்யவும். யாழ். உலோகத் தொழிற்சாலை, 252, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 8849

ஆங்கிலம் தெரிந்த பெண் லிகிதர் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். மோர்வின்ஸ், 91/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (8841)

## தவறிவிட்டது

1981-04-09-ம் திகதி காலை கச்சேரி பஸ்ஸில் காணிப்பெர்மிட் பத்திரம் இல. 106/1/7B BOP கைப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் எமக்கு அறியத்தரவும். எஸ் கே முத்துக்குமாரு, 70, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 8861

## விற்பனைக்கு

ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதியில் வீடு கட்டுவதற்குரிய இரண்டு அல்லது மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சி. சத்தியநாதன், 124 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (8847)

அரியாலை, கண்டிவீதியில் யூதேயு சொரூபத்துக்கு எதிரில் நாலு பரப்புக்காணி சிறிய கடைக்கட்டிடத்துடன் விற்பனைக்குண்டு. நல்ல விலை கோருபவர்கள் தொடர்பு கொள்ளவும் 123 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 8852

தச்சுவேலையந்திரம் Model C 35 Italy விபரங்களுக்கு உடுப்பிஹோட்டல் 134, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். 8829

மூல்லைத்தீவு கோயில் குடியிருப்புப் பகுதியில் சென் மெரிஸ் ரோட் இல் 2 பெரிய அறை ஆப்பீஸ் ரூம், முன் விறாந்தை, பின் விறாந்தை குசினியுடன் கிணறும் சேர்ந்த கல்வீட்டு வளவு 12 பரப்புக் காணியில் அடங்கியுள்ளது. மா, தென்னை போன்ற பிரயோசனங்கள் யாவும் அடங்கிய இவ்வீடு வளவு விற்பனைக்குண்டு. விலை மற்றும் விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்க! M. R. சௌந்தரநாயகம், இல. 1, சென்பற்றிக்ஸ் ரோட், யாழ்ப்பாணம். அல்லது A. பேதுருபிள்ளை, வியாபார நிலையம், P. W. D. ரோட், மூல்லைத்தீவு. (8818)

புதிய ஹொண்டா C D 200 இல. 82 ஸ்ரீ தொடர் இலக்கம் விற்பனைக்குஉண்டு. முகவரி; க. துரைராசா, 2-ம் ஒழுங்கை, கச்சாய் ரோட், சாவகச்சேரி (8846)

## விற்பனைக்கு

29 சிறி FORD மினி பஸ் பிரயாண வண்டி விற்பனைக்குண்டு. விற்பனைச் சாமான்களும் ஏற்றலாம். தொடர்பு; 24, 2-ம குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8031 (8863)

நல்ல நிலையிலுள்ள 22 சிறீ டீசல் லொறி பிறன்சுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: 46/1. பிறவுண் ரோட். யாழ்ப்பாணம். 8862

12 சைத்தறிகள் வாட்பிங் ரோலர் உட்பட சகல உபகரணங்களுடன் மலிவு விலையில் உண்டு K. கணேசன், கலைவாணி மில் லேன், கொக்குவில் கிழக்கு. 8848

குரும்பசிட்டியில் சந்திக்கண்மையில் சன்மார்க்க சபைக்கு அருகிலுள்ள $4\frac{1}{2}$ பரப்பு சதுரக் காணி விற்பனைக்குண்டு. நல்ல சுற்றாடலுடன் கூடியது. கடைகட்ட, வீடுகட்ட உகந்தது. தொடர்புகொள்க: ''சசிகிரி'', இராசவீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 8832

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் $1\frac{1}{2}$ பரப்புக்காணியும், பண்டியன்தாள்வு பிரதான வீதியில் $1\frac{1}{2}$ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. ச. துரைரத்தினம், 50, பாரதி வீதி. கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 8831

கிளிநொச்சி பழைய பஸ் நிலையம் முன்னால் கடை விற்பனைக்கு இருக்கிறது. எல்லா வசதியும் உள்ளது. மில்வேலைக்கு வசதி இருக்கிறது. நேரில் தொடர்புகொள்ளவும். மா. பாலசுப்பிரமணியம், M.M.B. றேடஸ், கிளிநொச்சி. 88[illegible]

---

## கேள்வி விளம்பரம்

லொறி - இசூசு (E L F)
மொடல் 24ஸ்ரீ 9331
விற்பனை

ரூபா 1000/— வைப்புச் செய்து, மீளப் பெறமுடியாத ரூபா 5/- செலுத்தி சங்கத்திலிருந்து கேள்விப்பத்திரம் பெற்று பூர்த்தி செய்து 21-04-1981-க்கு முன் கிடைக்கக்கூடிய மெழுகு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்
புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
1981-04-08. 8539

## காணி விற்பனை

★ வீடு கட்டக்கூடிய 4 பரப்பு
★ கந்தர்மடம் சந்திக்கு அண்மையில்.
★ உடன் தொடர்புகொள்ளவும்.

திருமதிலோ.குணரத்தினம்
மே/பா. திருமதி ப பரமானந்தம்
''பரம்ஸ் இல்லம்''
120/4, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
8859

---

## அந்தியேட்டிக் கிரியைகள்



**திரு. நா. நல்லசேகரம் (N. N.)**
வர்த்தகர், பண்டத்தரிப்பு

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் (இன்று) 12-4-1981 ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உறவினர்களையும் நண்பர்களையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றேன்.

திருமதி செ. நல்லசேகரம்.
பண்டத்தரிப்பு.
(8864)



# மலட்டுப் பசுக்கள்

'ஆனந்தி'

மழை இருட்டிலே நின்று விறைத்துக் குளிர் நடுங்கிக்கொண்டிருந்த அவள்முகத்தை உற்றுப்பார்க்கிற ஒரு சபலத்தோடு உள்ளே அவர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அதற்குக் காரணம் அவள் வயதல்ல, அவர் அனுபவிக்க விரும்புகிற பொய்யான புகழ் தரக்கூடிய வெளிச்சங்களுக்கு ஒரு மறைமுக சாட்சி உண்மை போன்றவள் அவள். ஆனால் அவள் நிரபராதி. இவைகள் ஏதோ ஒரு சுயத்தோன்றுதலில் தாமாகவேநிகழ்கின்றன.

மழையைப்பற்றியோ இருட்டைப்பற்றியோ அவருக்கு என்ன கவலை? அவள் இருட்டாகவும் இருப்பாள்- இருந்து வருவது கண்கூடு. இவர் அதற்கு எதிர்மறையில் தாமே சகலதுமாய் உணர்ந்துகொண்ட நிகழ்கால விழிப்பில், அந்தப் பூரித்த சந்தோஷ நிழலில் வாழ்க்கை தரிசனம் காணுகவராகவே இன்னும் இருக்கிறார்.

வாழ்க்கையென்றால் அது அவளாகவும் இருக்கலாம். அவரின் ஒளி தேஜஸுக்கு முன் நிற்கிற அவள் வாழ்க்கை இருட்டு, அதையே பார்த்து லயித்துக்கொண்டிருக்கிற அவர் சபலம் ஒரு பொய்யல்ல.

அவள் நிழல்போல, ஒளி மங்கி இன்னும் நிற்கிறாள். மழைதான் இன்னும் விடவில்லையே! காலையிலிருந்து விடாமல் பெய்கிற மழை...... அது விட்டால்தான் அவளுக்கு விடுதலை கிடைக்கும்.

தினமும் முற்றம் கூட்ட அங்கு அவள் வருகிறாள். அதற்குப் பத்துரூபாய் சம்பளம். அத்தோடு சில சில்லறைவேலைகளையும் அவளைச் செய்யச் சொல்கிறார்கள். புறப்பிரக்ஞைபற்று, உளுத்துப்போன அவள் மனத்திற்கு அது ஒரு பாரமாகவே தெரிவதில்லை. அவள் எல்லாவற்றையும் விளையாட்டாகவே செய்கிறாள்.

இன்னும் மழைவிடவில்லை. அவள் வாசல் முகப்புப் படியிலே சுவரோடு சாய்ந்து முறுவலித்து நிற்கிறாள். ஜன்னல் கண்ணாடிக்கதவை இழுத்து வைத்துக்கொண்டு, உள்ளே திரும்பி அவரைப் பார்த்துக் கண்களிலே மாறாத அந்தச் சோகக்களையோடு அவள் வரண்ட புன்னகையுடன் சிரிக்கிறதை ஒரு வேடிக்கை அனுபவமாகப் பார்த்து ரசிக்கிறார் அவர். திடீரென்று ஏதோ நினைப்புவந்து கேட்டார்.

"உனக்குக் குளிரவில்லையா சீதா?"

"குளிருது! நானெங்கேயோ இருக்கிறன்."

"உனக்கு நினைப்பு அதிகம், உனக்கு உடைத்துச் சொன்னால்தான் விளங்கும். அதை இன்னொரு தடவை சந்தர்ப்பம் வரும்போது சொல்கிறனே. இப்ப மழை விட்டிட்டுது. நீ போய்க் கூட்டு."

அவள் அவரை நன்றாகப் புரிந்துகொண்டு கொஞ்ச நேரம் பொழுதைக் கலகலப்பாக்கத் தன்னை மறந்துபோய் அவரை ஒரு இரட்டைவேட நடிகன் என்று கருதுகிற கேலி வழிந்த குரலிலே அவள் சொன்னாள்.

"நீங்கள்தான் அடிக்கடி மேடையிலே போட்டு உடைக்கிறியளே! என்னை வேறு உடைக்கவேண்டுமா?"

"அப்படி உடைத்தால்தான் எனக்கு மேடையிலே தெளிவாகப் பேசமுடியும்"

"அதுக்கு நாங்களே! என்று அவள் குறுக்கிட்டாள்"

குரலை உயர்த்திக்கொண்டு மழைக் கரகரப்பு ஓய்ந்த அந்த நிசப்தமான தனிமையைக் கிழித்துக்கொண்டு அவள் சொன்னாள்,

"யாராயிருந்தாலென்ன, இந்தக் கலையிலே நான் முன்னேறுவதற்குத் தேவை, பிரச்னைப்படுகிற ஒரு தனிமனிதனைப்பற்றிய உயிருள்ள சிந்தனை வார்ப்புகள். அது நீயாகக்கூட இருக்கலாம். உனக்கு இதில் பெருமையில்லையா? ஒரு நாளைக்கு மின்னுகின்ற ஒளிக்கீற்றுகள் நடுவே - நான் கம்பீரமாய் மேடையேறி உன்னைப்பற்றிச் சொல்லுவேன்."

அவள் கேட்டாள்.

"உங்கள் பேச்சுக்கு நானா? நல்லாய்த்தானிருக்கு - நான் ஒரு வெட்கம்கெட்ட பொம்பிளை. இந்த வயதிலே இன்னும் சடங்குகூட முடியாமல் ஏதோ ஒரு நினைவுப்பசுமையிலே, என்னை மறந்து எல்லா இடமும் உலாத்தித்திரியிறன். அட! நான் எங்கை உலாத்துகிறன், என்ரை வயிற்றுப்பாட்டுக்கு ஊர்சுற்றி உழைத்துத் திரிகிறன்."

"ஓமெடி! காசு இல்லாட்டால் அப்படி அலையத்தான் வேணும் அதுக்கு நானென்ன செய்கிறது. நீ இஞ்சை நின்று நேரத்தை வீணாக்காதே - அம்மா வந்து கோபிக்கப் போறா-ஓடிப்போய்க் கூட்டு."

அவள் வீட்டைச் சுற்றிக் குப்பை கூட்டுவதற்காக விளக்குமாற்றை எடுத்துக்கொண்டு போகும்வழியில் வீட்டுப் பின்வாசல் கதவைத் திறந்துகொண்டு அவள் வயதொத்த ஓர் அழகான வாலிப புருஷன் சைக்கிளில் எங்கோ புறப்பட ஆயத்தமாகி எதிரே வந்தான். அவன் படித்த ஆண்மைக்களையுடன் ஓர் ஆங்கிலக்கனவானுக்குரிய தோற்றக் கம்பீரத்துடன் முன்நெற்றியில் வந்து விழுந்து படிந்த கேசச் சுருளை லாவகமாக ஒரு கையால் ஒதுக்கிவிட்டுக்கொண்டு சைக்கிளைப் பிடித்துத் தள்ளியவாறே, அவன்வரும்போது அவள்மனதில் பரவசம் வழிகிற நினைப்போடு கண்கள் குதூகலித்து அவனைப் பார்த்தாள். அவனோ அவளின் யதார்த்த நிலையிலேயே அவளை இனம் கண்டுகொண்டு பரம்பரைச் சுபாவம் மாறாத தொனியில் உரத்துச் சொன்னான்.

"சனியன்! நான் வெளிக்கிட்டால். முழுவியளத்துக்கு ஒன்று வந்துவிடும், இப்ப கூட்டேலையென்று யார் அழுதது! போய் எறிஞ்சுபோட்டு வா."

அப்பாவின் எதிரிடைக் குணங்களில்லாமல், வெறும் நடிப்பாக வாழ்க்கைக் குரூரங்களுக்குப் பரிந்துகொண்டு பேச வராமல், தன்னுடைய சுய ஆளுகைக் குணங்களுடன். அவன் இப்படி எரிச்சல் தீர்த்துப் பேசுவதை-ஒரு வேடிக்கை போலக் கேட்டுக்கொண்டு அவள் மெய்மறந்து நின்றிருந்தாள். அவன் அடிக்கடி இப்படித்தான் வருவான். அவனுக்குக் கொழும்பிலேயே ஓர் உல்லாசக் கனவான் வாழ்க்கை இருக்கிறது. அவனுடைய படிப்பு நாகரீகமே அவளைப் பெரிதும் கவரக்கூடியதாக இருந்தது. அப்படியொரு உத்தியோக லட்சண புருஷனையே தன் வாழ்க்கை நாயகனாக அவள் மனதில் வரித்துக்கொண்டிருக்கிறாள். இது ஏன் வந்தது என்று அவளுக்கே தெரியவில்லை அவள் இயல்பை ஒட்டிய இந்த நிதர்சன விழிப்பு-அவள்வரையிலும் ஒரு பொய்யாகித் தூங்கி வழிந்தது. அவள் எப்படி அவனைக் கனவுகாணலாம். அது சாத்தியமா?

அவர்களுக்கு இவள்போன்ற இப்படியானவர்களை உதைத்து மகிழ்வதே ஒரு புதுமையான வாழ்க்கைப் புதிர். இப்புதிர்களைக் களைந்துகொண்டு வெளிவரும் எந்தவொரு தனி மனிதத் தோன்றுதலுமில்லாமல் இப்போது அவள் நினைப்புக்கூட அனாதையாகிவிட்டிருக்கிறது. ஆனால் அந்த அனாதை நிழல் - மறைக்கமுடியாத சோகத்திட்டாய் இன்னும் அவளுடனேயே ஒட்டிநிற்கிறது.

இப்போது பெரும்பாலான கழிவு நாட்களிலும்கூட ஓயாமல் அவள் அந்தக் கனவைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறாள். அவளைப்பெற்ற அம்மாக்காரிக்கே அதைக்கேட்கப் பற்றிக்கொண்டு வருகிறது.

இந்தப் பேச்சாளப் பிரசங்கிக்கு இது ஒன்றும் தெரியாத நிலையில். ஒரு நாள் அவள் அம்மாக்காரியேவந்து அழகான வக்கணைப் பேச்சுடன் வத்தி வைத்துவிட்டுப் போகிறாள். அவர் தம்மை மட்டுமே உணர்ந்து வாழ்கிற வக்கிரபுத்தியில் - அவள் வரவின் எதிர்மோதலுக்காகக் காத்துக்கொண்டிருக்கிற சமயம்......

மீண்டும் அவள் வந்தாள். இன்னும்தான் அவள் கூட்டிக்கொண்டிருக்கிறாள். இந்தக் கூட்டு விலங்கு நிலையிலும்- அவள் கனவு மனதில் தெம்பிழக்காமல் - அது வாழ்வாகாமல், அவள்பூண் கன்னித்துறவின் தபசுக்கோலம்- அது வரட்சி சாய்கிறது. அச் சாயலின் ஒவ்வொரு உச்சிப்பொழுதிலும் அவள் கண்கள் கானலில் தோய்த்து உருக்குலைந்து எழுவதும், அழுவதும், சோகம் கலக்கின்ற வாழ்வின் சாட்சித் தடங்களாகவேஇன்னும் இருக்கின்றன.

அந்தத் தடங்களை விட்டு விலகாத ஒரு மௌனப் போர்வை மட்டுமே இப்போது அவளுடையது. அப்போர்வையின் பின்னணியில் ஆழப் புதைந்த சோகத்தோடு, அவள் வெகுவாக உருக்குலைந்து போனால்.

அவருக்குத் தம் களிப்புநாட்களோடு - அவளை இப்படி வேடிக்கை பார்க்கிறதே ஒரு பொழுதுபோக்கு. அது அவள் நிஜவாழ்க்கையையே ஒளிப்படுத்தும். ஆனால் அவர் மேடைப்பேச்சுசம்பந்தப்பட்ட கலைப்புகழ்வாழ்வுக்கு, அதிலேயே தீவிரமாய் ஆழ்ந்து போகிற மெய்யான ஒரு நிதரிசனவாதிபோல் அவர் நடமாடுவார்.

இந்தக் கேலிக்கூத்துக்கு இடமளித்துக்கொண்டு நடுவே நிற்கிற அவள், அவரின் இந்த அபத்தமான குணவேறுபாடுகளுக்கு அப்பால், தன் பாமர நிலையிலேயே, உணர்ச்சிகளைச் சிந்தித்துக்கொண்டு ஒரு பாவமும் அறியாமல் நிற்கிறாள்.

அந்த முக்கியமான மழைகளுக்குப் பிறகு அவளை அவர் சந்திக்கவேயில்லை. அவள் வந்தாலும் அவளைச் சந்திக்க அவருக்குப் பொழுது இருந்ததில்லை. அவர் வேலைநாட்கள் தவிர்ந்த, ஏனைய நாட்களிலும் பொதுவாழ்வு இலட்சியங்களுக்காக வெளியிலேயே அலைந்து திரிவது வழக்கமாக இருந்தது. அதிலும் மேடைநிகழ்ச்சிகள்தான் அடிக்கடி வருகிறதே! எல்லா விழாக்களிலும் அவர் பேசுவார். அவர் பேச்சைக் கேட்பதற்கென்றே ஏராளமான விசிறிகள் இருந்தார்கள். அவர்களுக்காகவே அவர் குரலில் உயிர்கொடுத்துப்பேசுவார். அது சமூக ஜனங்களின் சோக அவலங்களுக்காகவும் பேசுவதுபோலிருக்கும்,

அந்தப் பேச்சின் தொனிக்காக அவர் அரும்பாடுபட்டு வெவ்வேறு இடங்களில் சுற்றியலைந்து திக்கற்ற மனிதர்களைத் தேடிக்கண்டு பிடித்து வருவார், அவர்கள் உயிர் மூச்சுக்குழலிலே ஏறி நின்று கொண்டு, அவர்களோடு ஒன்றுபட்ட ஒரு துருவப் பெருமையுடன் கண்ணீரைப் போலியாக்கி அவர் இதயம் கதறக் கதறப் பேசுவார்.

இப்போது கொஞ்சநாட்களாகவே அவருக்கு ஒரு தீனி கிடைத்திருக்கிறது. அவள் ..... ஒரு காலயுகத்தையே கழித்துக் கொண்டு உருக்குலைந்த வரட்சியுடன் அவள் வந்து சேர்ந்திருக்கிறாள். முற்றத்திலே நிலாமேடை விரித்திருக்கிறது. வெய்யில் காயவில்லாமல் மங்கிய காலை நிலாவொளியில் இளம் மலராய் வந்து நின்று சிலுசிலுக்க அவளென்ன காலம் விழுங்காத ஒரு தேவ இளம் பெண்ணா! கேவலம்! ஒரு மானுட ஜென்மத்துப் பாவக் கறை.

அந்தத்தீட்டுத்தல் மீது பட்டுவிடுமோ என்ற பயத்துடன் அவர் வீட்டுப்படியின் உச்சாணிப்பீடத்தில் கம்பீரக் காலிட்டு அமர்ந்திருக்கிறார். கதவுத்திரையை முகத்துக்கு நேரே இழுத்து வைத்துக்கொண்டு அந்தக் கண்ணாடிச் சீலை வழியே அவளை ஊடுருவிப் பிறகு அவளைச் சந்திக்கு இழுத்து அவமானப்படுத்த வேண்டுமென்ற ஒரு நப்பாசை வெறியுடன் உள்ளே கதவு மூலையின் சுவரோடு மறைந்து நிற்கிற மனைவியைத் திரும்பிப் பார்த்துச் சீதா காதில் படும்படியாக அவர் நையாண்டிக் குரலிலே சொல்கிறார்.

"இவளுக்கும் பெரிய எண்ணம் என்ரை மகன் மாதிரி ஒரு துரை மாப்பிள்ளை வேணுமாமே இவளுக்கு. என்ன தகுதியிலே இவள் இப்படி ஆசைப்படுகிறாள். சீதனமோ, வடிவோ இல்லாமல் எண்ணத்தைப் பார்''

தகுதிகளை நினைத்து ஆசைகளை வளர்க்கின்ற அந்தப்புத்திசாலித்தனம் அவளுக்கில்லைத்தான். ஒருவேளை அவருக்கிருக்கலாம். இருந்தோ இல்லாமலோ, மூளைக்கு வருகிற அத்தனை பிரபவங்களும் வேறு வழிகளிலே பட்டை தீட்டிக்கொண்டுஜொலிக்கவில்லையா?

அவரை வைத்தே அதைப் புடம்காண்பதுபோல, அவள் இருள் குரூரம் கொண்டிருக்கிற முகத்தோடு, நித்திய சோகத்தில் அழுதவடியும் ஒளி மங்கிப்போன கண்களை உயர்த்தி, ஓர் உள்ளுணர்வு ஆற்றாமை விழிப்போடு அவரைச் சுட்டெரித்து விடுவது போலப் பார்த்து மனத்திற்குள் பொருமி அழுதாள்.

அந்த அழுகையின் கனம் பிடிபடாமல் அவர் நிற்கிற தூரஎல்லையில், தம் மேடைப் புகழ் கருதி, அவளைத்தரிசனப் படுத்துகின்ற பொய்க்கருணையில், அதற்காக அழுதுகண்கள் நடிக்கின்ற ஒரு போலி வார்ப்பாக, அவர் தடுமாற்றம் கொண்டிருக்கிறார். அப்போலியிலேயே நன்றாக வேரூன்றிப் போன ஒரு பழக்க சுபாவத்தோடு - அவளை உற்றுக் குறி பார்த்து, திடீரென்று அந்த உள் உறுத்தல் தாங்காமல் அவசரமாய்க் குரலை ஏற்றிக் கொண்டு அவர் சொல்கிறார்.

"அடடே! மறந்துபோய் விட்டேனே - இன்றைக்கு இரவு எனக்கு ஒரு பெரிய நிகழ்ச்சியிருக்கே - அது இஞ்சைதான் இலக்கியக் கலைவிழா ஒன்று வருகுது. அதிலே நான் என்னத்தைப்பற்றிப் பேசப் போறன் தெரியுமா? அதை இப்ப சொல்லக்கூடாது. சீதா! நீயும் வந்து கேளேன்-'

அவள் சொல்கிறாள்.

"நான் வெறும் ஜடம், எனக்கு என்ன தெரியும்''

அவள்இன்னும் ஜடமாகவே இருக்கிறாள். அவர் பேச்சை ஏதோ ஒரு சுயவெறியிலே- இன்றைக்குத்தான் முதன்முதலாக அவள் கேட்கப்போகிறாள். ஆனால் கூட்டத்திற்குப் போயல்ல, அவர் குரலைச் சமூக பிரகடனமாக ஊரெங்கும் சொல்வதற்கு. 'லவுட்ஸ்பீக்கர்' குழாய்தான் இருக்குதே.

அன்று மாலை ஐந்துமணி தொடங்கி ஒலித்துக்கொண்டிருந்த 'லவுட்ஸ்பீக்கர்' குரலில் அவர் குரலை இனம்காண்பதற்காக அவள் வேளைக்கே வேலை முடித்துக்கொண்டு வெளிமுற்றத்திலே வந்து குந்தி விழித்துக்கொண்டிருக்கிறாள்.

பகலின் பரபரப்புக் குறைந்து, இரவு கனத்த நிசப்தத்தினிடையே சரியாக ஏழுமணிக்கு அவர் குரல் மைக்கிலே கேட்டது. ஒரு சத்திய புருஷனுக்குரிய கம்பீரத்துடன் அவர் மைக்குக்கு முன்னாலே உணர்ச்சிவசப்பட்டு யாருக்காகப் பேசுகிறார் என்பது தெளி

(9-ம் பக்கம் பார்க்க)

## தளராது வளர்க!

கடந்த வாரமலரில் பிரசுரமான 'தளரா வளர்தெங்கு' என்ற அ. செ. மு.வின் சிறுகதை தெள்ளெனறசீரிய இலக்கிய நடையிலே தரம் மிகுந்ததாகவும் கருத்தோட்டம், கருத்தாழம் என்பன மிக்கதாகவும் அமைந்திருந்தது. கலைஞன் எனபவன் வறுமையின் பிடியில் சிக்கியவன் என தற்கால வரலாறு தற்காலத்தில் பொருள் கற்பிக்கின்றது.

இவ்வறுமையெனும் வரலாற்றுக்கு அ. செ. மு. விதிவிலக்கானவரல்ல. இக் கலைஞருக்கு தற்போது நிதிதிரட்டி அளிப்பதற்கு வாசகர்கள் முன் வந்திருக்கிறார்கள். இந்நேரத்தில் சிறுகதை பிரசுரமானது பாராட்டுக்குரியது.

எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் முயற்சியிலும், அவர்களின் ஆக்கங்களைத் திருத்தங்களுடன் பிரசுரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு மக்கள் மதிப்பில் புகழ்க்கொடி நிலைநாட்டிய ஈழநாடு அ. செ. மு. போன்ற கலைஞர்களை அன்று தொட்டு இன்றுவரை ஊக்கப்படுத்துவதில் பெரு முயற்சி எடுத்துவருகிறது. இம் முயற்சியில் ஈழநாடு தளராது வளரவும் அ. செ. மு போன்றவர்கள் கலையுலகில் பிரகாசிக்கவும் என் நல்லாசிகள்.

செல்வன்
தி. முருகதாசன்
பெரியரசடிவீதி,
சங்கத்தானை;
சாவகச்சேரி.

பாலர் அபிநயப்பாடல் (9)

## பூனைக்குட்டியார்

-கல்வயல் வே. குமாரசாமி-

பளபள பளபள
கண்ணைக் காட்டும்
பட்டுப் பூனைக் குட்டியார்
பாலைக் குடிக்கக்
கண்ணை மூடும்
பஞ்சுப் பூனைக் குட்டியார்

எலிகளை வளைகளில்
கண்டால் பதுங்கும்
எங்கள் பூனைக்குட்டியார்
ஏறிப் பிடிக்கத்
தாவிப் பாய்வார்
எங்கள் பூனைக்குட்டியார்

காலை நக்கி
முகத்தைக் கழுவும்
சின்னப் பூனைக் குட்டியார்
வாலை ஆட்டிக்
காலில் உரசும்
வடிவுப் பூனைக் குட்டியார்

அமரர் டாக்டர் கு. சிவப்பிரகாசம் அவர்களின் அந்தியேட்டி 14-ம் திகதி இடம் பெறுகின்றது. அதையொட்டி அமரரைப் பற்றி முன்னாள் அமைச்சரும் டாக்டரின் மாணவருமான திரு. செல்லையா குமாரசூரியர் எழுதிய கட்டுரையை இங்கு தருகின்றோம்.

## டாக்டர் சிவப்பிரகாசம்

# எல்லோரையும் சமமாக நடத்திய பெருமகன்



### செல்லையா குமாரசூரியர்

அரைப்பங்கு மெய்ஞ்ஞானம் அத்துடன் சேர்ந்த மிகுதிப்பாகம் அன்பு. இவைகளை இரண்டறக்கலந்து ஒரு மனித உருவத்தைப்படைத்து அதற்கு தமிழமூலாம் பூசினால் அமைவது டாக்டர் கு. சிவப்பிரகாசம். நான் 9 வயதாக இருக்கும்போது கண்ட எமது குரு, கடவுள் இவரே. இவருடைய முகத்தில் ஒளிவீசும் தேஜஸ்- அவர் உடல்சாந்த சொரூபம். இச்சாந்தம் எப்படி உண்டானது, இதைடாக்டர் அவர்கள் எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்ற புரியாத புதிரைப்பற்றி ஆராய்வதில் 9 வயதுச் சிறுவர்களாகிய நாம் பலமணி நேரங்களைக் கழித்ததுண்டு. அக்காலத்தில் சரியான பதில் கிடைக்கவில்லை. ஆனால் என்னுடைய சிறிய அறிவுக்கு எட்டிய வகையில் இலண்டன் பல்கலைக்கழகம் தான் இதைக் கொடுத்திருக்க வேண்டும் என்று நான் அப்போது நினைத்திருந்தேன் ஒருசில ஆண்டுகளுக்குப்பின் எம் போன்றவர்கள் இலண்டன் பல்கலைக் கழகத்துக்கு செல்லக் கூடிய வாய்ப்புக் கிட்டியது அங்கே.

''கோயில் முழுதும் கண்டேன், கோபுரவாயில் கண்டேன்

ஆனல் தேவாதி தேவனை எங்குதேடியும் கண்டிலேன்''

நிச்சயமாக டாக்டர் அவர்கள் அமைதியையும் சாந்தத்தையும் அன்பையும் மெய்ஞ்ஞானத்தையும் அங்கு பெற்றுக் கொள்ளவில்லை. (இலண்டன் பல்கலைக்கழகத்தில்) இவர் பிறந்த குடும்பம், இவருடைய ஆழ்ந்த சைவப் பற்று, பெரியார் சிவபாதசுந்தரனருடைய வழிகாட்டல், போன்றவை தான் இவரைப் பெரியவராக்கின. வெறும் பல்கலைக் கழகப்படிப்பு அல்ல.

எந்நேரமும் ஆழ்ந்த யோசனை, இவ்வுலகத்தில் இருந்தாலும் வேறு உலகங்களில் நடமாடுபவர் போல பள்ளிக்கூடத்தைச் சுற்றிச் சுற்றி வருவார். மேல்நாட்டு உடை அணிந்திருந்தாலும் கூட தவஞானி போல் தோற்றம் அளிப்பார். ஆகாயம், நீர், மண் போன்ற பூதங்களை ஊடுருவிப் பார்ப்பார். பாலவயது கழிந்தும் பிரம்மச்சாரியாகவே இருந்தார். சிறுவர்களாகிய நாம் அறிந்த டாக்டர்கள் எல்லாம் மருந்து கொடுப்பவர்களாக இருந்தார்கள். ஆனல் எம்முடைய குரு அவர்கள் டாக்டராய் இருந்தாலும் அறிவையும் அன்பையும் தவிர வேறு மருந்துகள் அவரிடம் கிடையாது. அக்காலத்திலேயே மனோதத்துவ நிலைகளைக் குடைந்து குடைந்து ஆராய்ச்சி செய்தவர். ஆனல் குழந்தை போன்றவர். சாதாரணவர் ஏழ்மை வாழ்வு வாழும் கிராம மக்களுடன் சகஜமாகப் பழகக் கூடியவர். நிச்சயமாக எமக்குச் சோசலிசம் கற்றுத் தந்தவரே எமது குரு டாக்டர் சிவப்பிரகாசம் அவர்களே.

யாருடனும் அவரவருடைய அந்தஸ்தையோ நிலைமையையோ பார்த்துப் பழகுபவர் அல்லர். குழந்தைகளுக்கும் ஏழைகளுக்கும் என்றுமே அவர் நேரம் இல்லை என்று சொன்னது கிடையாது நாம் எமது சிறுவயதைத் தாண்டிப் படித்து வளர்ந்து பல படித்தவர்கள் கீழும், பலபடித்தவர்களோடு சேர்ந்தும் வேலை செய்யும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது. படித்தவர்கள் என்றுமே தாங்கள் படித்தவர்கள் என்பதை மறப்பதில்லை. இவர்களிடம் சாந்தம் அதிகமாக இருப்பதில்லை. அமைதி நிச்சயமாக அவர்களை அணுகுவதில்லை. சாதாரண மக்களுக்கு அவர்கள் தங்களுடைய நேரத்தை வழங்குவது மிக அரிது. சரஸ்வதிக்குக்கூடச் சாந்தம் இருக்க முடியாதென்று நாம் கருதக் கூடிய ஒரு காலகட்டத்தில் வாழ்கிறோம். இப்படியான ஒரு காலத்தில் டாக்டர் அவர்கள் எவ்வளவோ உயர்ந்த ஆராய்ச்சிகள் நிறைந்த படிப்புக்களை எல்லாம் படித்துக் கரைகண்டவராய் இருந்தும் கூட சாதாரண கிராம மக்களின் நிலையில் இருந்தே வாழ்க்கையை சுவைத்துக் கொண்டிருந்தார். இவர் ஒரு மகரிஷி. இவரைப்போல் இன்னொருவரைக் காண்பது அரிது.

எம்போன்றவர்கள் வாழ்க்கையில் சிலபொறுப்புக்களைப் பதவிகளை வகிக்க முடிந்ததென்றால் அதற்கு மூலகாரணமாய் இருந்தவர்கள் பெரியார் சிவபாத சுந்தரனார், டாக்டர் கு சிவப்பிரகாசம், ஈ. ஏ. கந்தையா போன்றவர்கள். இவர்களைப் போல் மனிதர்களை இனிமேல் இம்மாநிலத்தில் காண்பதரிது. அவர்கள் என்றுமே மறையமாட்டார்கள் மக்கள் மனதிலே இப்புவியில் மண்ணினுடைய நுண்தன்மைகளில் ஒன்றாக என்றுமே நிலைத்திருப்பார்கள். எம்முடைய நாடு உள்ளவரை இவர்களுடைய சேவையும் பெயர்களும் வாழ்ந்து, ஓங்கி, வளர்ந்து நிற்கும். ஆதிக்கடவுளின் அடி சேர்ந்து நிற்கும் பெரியார்களுக்கு எமது கண்ணீர் தோய்ந்த சிரம் தாழ்ந்த அஞ்சலிகள்.

---

# கோயில் நாகரிகம்

### அமரர் இ: இரத்தினம்

''உள்குவார் உள்ளத்தானை
உணர்வெனும் பெருமையானை
உள்கினேன் நானுங்காண்பான்
உருகினென் ஊறியூறி
எள்கினேன் எந்தைபெம்மான்
இருதலை மின்னுகின்ற
கொள்ளிமேல் எறும்பெனுள்
ளம்
எங்ஙனங் கூடுமாறே''

திருமுறை: 4·731

மனித வரலாற்றினை ஆராய்கின்றவர்கள் பல்வகைக் காரணிகளை அடித்தளமாகக் கொண்டு ஆய்வர். பெரும்பாலும் ஆதிநாகரிகங்களை, புவியியல் அமைவினை அடிப்படையாகக்கொண்டு பொருள்முறை ஊக்கினை மிகைப்படுத்துவர். அவ்வாறுய நோக்கிலேயே வரலாற்றின் படை கருவியாக ஆற்றுவெளி நாகரிகம் தோன்றியது.

ஒரு காலகட்ட வளர்ச்சிக்குப் பொருள் ஊக்குஉந்தலாக நிற்பதும், அதேகாலத்தில் அவ்வூக்கினின்றும் எழும் நேர்முக மறைமுக எழுச்சிகளும் உந்தலாகி நிற்பதையும் காணலாம், இவ்வெழுச்சிகளின் வரலாற்றின் சக்திமிகு உந்தலாகி நிற்பது பண்பாடேயாம்.

ஆற்றுவெளி நாகரிகம் ஒரு காலகட்ட வளர்ச்சி. அதுஇயற்கை தந்த கருவி. ஆற்றுவெளிபோல், நமக்கு - தமிழர்க்கு - உதவியாய் நின்றதும் நிற்பதும் கோயில் நாகரிகம். கோயில் நாகரிகம் மன எழுச்சிகள் உந்தல்களின் பரிணமிப்பு. அன்பின் ஐந்திணை தான் தமிழர்க்குக் கோயில் நாகரிகம் அமைய உதவியது. அந்த அன்பின் ஐந்திணை பதங்கமாகி, வேதநெறியோடு இணங்கியே சிவநெறி தழைத்தது. அன்பின் ஐந்திணைக்கு ஊர்தியாயது சங்கத்தமிழ், சங்கத்தமிழ் வேறொரு கிளைவிட்டு அன்பொடு கூடி, திருவாய் மொழியாய், நெடுமால் நெறியாயிற்று இவ்விரு நெறிகளும் அன்பின் விளைந்த தேறல்கள். அன்பினில் விளைந்த ஞானங்கள் அன்பு நெறியே பக்தி நெறி. பக்திநெறி தமிழ் நாகரிகத்தின் பழுத்த பயன்.

தமிழகத்திலே சங்கத்தமிழ்க் காலத்தின்பின் தலையெடுத்த தமிழ்திருநெறியதமிழ். திருநெறியதமிழை ஆற்றல்மிக்கஇசை வடிவாக்கி, மக்கள் விரும்பும் உருவம் அளித்தவர் சம்பந்தர். சங்கத்தமிழ் தமிழர்க்கு இலக்கிய அழகியலை மட்டும் தந்ததொன்றன்று, பண்பாட்டு உந்தலின் வலுக்கூடமாயும் அது விளங்கியுள்ளது.

சம்பந்தர் தோற்றத்தோடு வேதநெறியில் ஒரு புரட்சி ஏற்பட்டது. 'வேதநெறி தழைத்தோங்க' என்று சேக்கிழார் கூறியது வெறும் இலக்கிய அலங்காரமன்று. சிவநெறிய அமைச்சர் ஒருவரின் ஆராய்ச்சி முடிபு அது.

சம்பந்தர்க்குமுன் பரதகண்டத்தில் இருந்த வேதநெறியும் அதன் பல்துறைகளும் தருக்கமும் விசாரணைகளும் மலிந்தவையாயிருந்தன. அவற்றோடு மாறுபட்ட புறச்சமயங்களும் தருக்கத்தைத் தீட்டுபவையாகவே விளங்கின. தருக்கநெறியும் விசாரணையும் மனிதனின் புத்தியைத் தீட்டி நுழைபுலத்தை மட்டும் வளம் படுத்துபவையாயின. போருக்கு வாள் தீட்டுவதுபோல், நுண்மதியின் கூர்மையை வாதங்களும் மறுவாதங்களும் இன்னும் விரிவாக்கி மனிதரிடை கசப்பையே வளர்த்தன.

தருக்கவியலாரின் மெய்யியல் ஆராய்ச்சி, முரண்பாட்டை அரண்படுத்தி பகைமை, காழ்ப்பு இரண்டையும் வளர்த்தன. நோக்கரிய நோக்கும் நுணுக்கரிய நுண்ணுணர்வுமான மெய்ப் பொருளை, புலநோக்கும் மதி நோக்கும் உணரவைக்கா. நுண்ணுணர்வு ஒத்துழைக்க வேண்டும்.

ஆளுடைய பிள்ளையார், சிவபாதவிருதயம் தவங்கிடந்து பெற்ற பிள்ளை, திருநீற்றின் ஒளிவிளக்க வந்த சிவஞானக்கொழுந்து.

நாம் மேலேகாட்டிய தேவாரத்தை நோக்குவோம் மெய்ம்மையாம் செம்பொருள் வெறும் புத்தி விடயமன்று. உள்ளத்தின் உள்ளமாகி, உணர்வெனும் பெருமையாகி நிற்பது அது. தருக்கம் அதனைக்காட்டாது. உருக்கந்தான் அதனை உணரவைக்கும். உணர்வு என்பது தனியே சித்தத்தின் சிகரமன்று. சித்தம்,உள்ளம், உடல் ஒருங்கிணைந்து முற்றுற அறியும் ஒரு செயற்பாடு அது, ஒரு முழுமைப்பற்றுகை அது. புத்தி அறிந்ததை உள்ளம்பற்றி நிற்கும் என்பது என்றும் உறுதியாகாது. அறிவு, ஞானம் என்பது சிவஞானமே. அது தருக்க, அதிபௌதிக அறிவன்று.

சிவஞானம் என்பது சேக்கிழார் கூறியதுபோன்று,

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்'' சிவனை எண்ணி எண்ணி உருகுவதே சிவஞானமென்கின்றார் சேக்கிழார்.

(திரு. பு. 1978)

ஓரிடத்தில் திருநாவுக்கரசர் (4-78-2) ''ஞானங் கற்றவர் தங்களோடும் உற்றிலேன் ஆதலாலே உணர்வுக்குச் சேயனானேன்'' என்கிறார். இங்கு ஞானங்கற்றவர் என்பவர் சிவஞானங் கற்றவர். அவர்களோடு உறவாடாததால் உணர்வு பெற்றிலேன். இந்த உணர்வுதான் பக்தி. இந்தப் பக்தியின் முதிர்வுதான் ஞானம். சிவபாத இருதயந்தான் ஞானசம்பந்தம்பெறும்.

தருக்கவழி, அறிவியல் வழி, பௌதிகவதீத விசாரணை வழி முடிவுற்றவை. இவைஉண்மை ஞானத்தைத் தரா. இதையே நம்மாழ்வார்.

''குறிக்கொள் ஞானங்களால்
எனையூழிசெய்தவமும்
கிறிக்கொண்டு இப்பிறப்பே
சிலநாளில் எய்தினன் யான்;
உறிக்கொண்ட வெண்ணெய்ப்
பால்
ஒளித்துண்ணுமம்மான்பின்
நெறிக்கொண்ட நெஞ்சனாய்ப்
பிறவித் துயர்கடிந்தே''

என்கிறார்.

ஆளுடைய பிள்ளையாரே,

''ஏதுக்களாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்கவேண்டா
சுடர்விட்டுள
னெங்கள் சோதி
மாதுக்கம் நீங்கல் உறுவீர்
மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே
வந்து சார்மின்களே''

எனக் கூறுகிறார்.

அனுமானங்கள், உரைகள் இவற்றால் இறைவனை அடைய முடியாது மனம்பற்றி வாழ்மின் என்கின்றபோது, இடையறாது மனத்தில் அவனை இருத்தி சிந்தித்து அன்புபூண்டு வாழ்மின் என்பது சம்பந்தர் கருத்து.

இவ்வாறாகப் புதிய ஒரு நெறியை - அன்புநெறியை - பக்திமார்க்கத்தைச் சம்பந்தர் தமிழ்மண்ணில் விதைத்தார். சங்கத் தமிழைத் திருநெறிய தமிழாக்கினார். எட்டுத்தொகை, பன்னிருதொகையாகிப் பதினன்கு சாத்திரமாயிற்று.

சம்பந்தரும் ஆழ்வார்களும் உழுது ''விருப்பெனும்வித்தை வித்தி''க் கனிவித்த களத்தில் தான் சங்கரர் தோன்றி ஒப்பற்ற மெய்யியல் விரித்தாரேனும், பக்திமான்களைப் புகழ்ந்தார், தாமே பலபக்திப்பாடல்கள் ஆக்கினார், அவர் பின் வந்த இராமானுசர், பக்தியையே அடித்தளமாகக் கொண்டு தம் விசிஷ்டாத்துவிதத்தை விரித்து விளக்கினார். கோயில் நாகரிகம் ஒப்பற்ற அன்புநெறி தந்த நாகரிகம். தமிழினத்திற்குத் தனியுரிமையுடைய ஒன்றுமட்டுமன்று. எத்துணைகாலம், செல்லினும் மானுட யாக்கை இருக்கும் வரை மனிதனை இறைவன் மாட்டு இட்டுச்செல்லும் ஒப்புயர்வற்ற ஒரு தனி நெறி அதுவேயாம் இற்றை நாட்களில் இலங்கையிலும், இந்தியாவிலும் எத்தனையோதியான நெறிகள், யோகமார்க்கங்கள் வேதாந்த வகுப்புகள் ஒரு நாகரிகமாகத் தோன்றிவளர்கின்றன. இவை சில அடிப்படையில் நம்மைக் கோயில்களிலிருந்தும் பிரித்துவிடுவதற்கான முறைகளாக அமைந்துவிடுகின்றன, எந்தத் தனிப்பட்ட சுவாமியாரினதும் யோகநெறி தமிழருக்கே அடிப்படையான பக்திநெறியிலிருந்து நம்மைப் பிரித்துவிட வழிவிடக்கூடாது எல்லாருடைய நெறிகளும் நம்மைக் கோயிலோடு பிணைப்பவையாக இருத்தல்வேண்டும் அவற்றைத்தான் நாம் ஏற்க வேண்டும்.

கோயில் நாகரிகம் - பக்தி நாகரிகம். இரண்டும் ஒன்றோடொன்று பின்னியவை வெகுசனத்தொடர்பு போற்றப்படும் காலத்தில் கோயிலைப் போல் மக்கள் உள்ளங்களைஒருமுகப்படுத்தக்கூடிய வேறுசாதனம் நமக்குக் கிடையாது.

(9-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்
போன்: 7199. தந்தி: வைரம்.

செய்தியும் சிந்தனையும்

# பரீட்சையில் சித்திபெறுவதுதான் சமயபாடத்தின் நோக்கமா?

பௌத்தபாடத்தை பௌத்தர் அல்லாத ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்களாம். சமயத்தை முறைப்படி கடைப்பிடித்து ஒழுகுகிறவர்களே அதனைக்கற்பிக்க வேண்டும் என்பது ஜேயவர்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர்ஜினதாஸ பெரேராவின் விருப்பம்.

சமய பாடத்தில் சித்திபெற வேண்டும் என்பதற்காகவே பெரும்பாலன மாணவர்கள் படிக்கிறார்கள். அந்த நோக்கத்துடனேயே ஆசிரியர்களும் படிப்பிக்கிறார்கள். ஆசிரியர்களால் முடியவில்லை யென்றால் டியூட்டரிகள் இருக்கவே இருக்கின்றன.

எனவே எவரிடமிருந்தாகிலும் பாடத்தைக் கேட்டுப் படித்துக்கொண்டால் போதும் சோதனையில் சித்தியடைவதற்கு என்ற மனப்பான்மை மாணவர்கள் மத்தியில் வளர்ந்து விட்டது. பிள்ளை பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்பதே பெற்றாரின் கவலையாகவுமிருப்பதால் படிப்பிக்கும் ஆசிரியரின் நடத்தைப்பற்றியோ சமயம் பற்றியோ அவர்களும் கவலை கொள்வதில்லை.

மனிதஉள்ளத்தோடும் ஆத்மீக வாழ்வோடும் சம்பந்தப்பட்ட சமயபாடம் போன்றவற்றை பரீட்சைக்காக படிப்பிக்கும் கொள்கை சரிதானா என்று பரிசீலித்துப்பார்ப்பது நல்லது தாம் சார்ந்துள்ள சமயத்தை முறையாகக் கடைப்பிடிக்காதவர்களிடம் அச்சமயத்தைப் பற்றிக்கற்கும் மாணவர்களும் அதனைக் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

## இந்துக்கள் அல்லாதவர்கள்

பௌத்தசமயத்தை பௌத்தர்கள் அல்லாதவர்கள் படிப்பிக்கிறார்கள் என்ற செய்தியைப் படிக்கும்போது மலையகத்தில் பலதமிழ்ப்பாடசாலைகளில் இந்துசமயப்பாடங்களை இந்துக்கள் அல்லாதவர்கள் படிப்பிப்பதாக கூறப்படுவது பற்றி எண்ணத்தோன்றுகின்றது

இந்துப்பிள்ளைகளே பெரும்பான்மையாகப்படிக்கும் பாடசாலைகளில் இந்துக்கள் அல்லாதவர்களே அதிபர்களாகவும் இருக்கிறார்கள் என்றும்கூட குறைகூறப்படுகின்றது

மலையகத்தில் ஆசிரியர்பதவிகளுக்கு அப்பகுதியில் படித்துவிட்டு வேலையில்லாதிருப்பவர்களையே நியமிக்கவேண்டும் என்று சில தொழிற்சங்கங்களும் ஸ்தாபனங்களும் கோரிவருவதில் நியாயம் இருக்கலாம் ஆனால் இந்துசமய மாணவர்கள் தம்சமயத்தை ஒழுங்காகக் கற்கும் வகையில் அந்தப்பாடங்களை நன்குகற்ற ஆசிரியர்களை வேண்டுமென்று ஒதுக்க முற்படுவது புத்திசாலித்தனமாகாது.

# 'கஞ்சா' மூலம் வெளிச்செலாவணி!

கஞ்சா செய்கையை அடியோடு அழித்துவிடக்கூடாது என்று சுதேச மருத்துவசபை கோரிக்கை விடுத்திருக்கிறதாம்.

கஞ்சா, ஒரு மூலிகை ஆயுள்வேத - சித்த மருத்துவ சிகிச்சைகளுக்கு இது ஒரு கண்கண்ட மருந்து. ஆனால் அளவோடு பாவிக்க வேண்டும். அளவுக்கும் அதிகமானால் அது ஒரு போதைப் பொருள். களவாக இச்செடிகளை அடர்ந்தகாடுகளின் நடுவில் பயிர்செய்து கொள்ளைவிலைகளுக்கு வெளியில் விற்கிறார்கள் சிலர். இது அரசுக்குப் பெரும் பிரச்சினையாகவிருக்கின்றது.

வெளிநாடுகளிலிருந்து 'ஹஷிஷ்' மரிஜுவானா, அபின் போன்ற பொருட்களை 'ஹிப்பி'களும் மற்றவர்களும் உள்நாட்டுக்குள் கொண்டு வருவதைத்தடுக்க அரசு பெரும் முயற்சி எடுத்துவருகின்றது. இதன் காரணமாக இந்த உள்நாட்டுப் போதைப் பொருளுக்கு உல்லாசப் பயணிகளின் அதிகரித்த வருகையால் கிராக்கி கூடிவிட்டது. எனவே தான் இந்தப் போதைப்பொருள் உற்பத்தியை அடியோடு ஒழித்துக்கட்ட அரசும் பொலிசாரும் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

என்றாலும் ஆயுர்வேத மருத்துவ சபையினரின் கோரிக்கையையும் அரசு உதாசீனம் செய்துவிட முடியாது. சில மருந்துகள் தயாரிப்பதற்கு இது முக்கியமான மூலிகையாகக் கருதப்படுவதால் அரசாங்கமே தனது மேற்பார்வையில் இதனைப் பயிர்செய்து மருத்துவர்களுக்கு கோட்டா முறையில் வழங்கலாம். வெளிநாடுகளில் கிராக்கியிருக்குமானால் முக்கிய வெளிச்செலாவணியைப் பெற்றுத்தரும் பொருளாக ஏற்றுமதியும் செய்யலாம்

சிகரட்புகையிலை குடிவகைகள் மற்றும் சுகாதாரத்துக்குக் கேடுவிளைவிக்கும் சரக்குகளை மூன்றாம் உலகநாடுகளுக்கு மேலைநாடுகள் கப்பல் கப்பலாக ஏற்றுமதிசெய்கையில் கஞ்சா போன்ற உற்சாகமூட்டும் ஒருபோதைப் பொருளை நாம் ஏற்றுமதி செய்தால் என்ன?

--'பெரு'

# வடக்கின் அபிவிருத்தியில் அரசுக்கு அதிக அக்கறை

வடபகுதியில் தேர்தல் தொகுதிகள் தோறும் அபிவிருத்தி வேலைகளைக்கவனிக்கவென 11 சிரேஷ்ட அமைச்சர்களையும் ஒரு பிரதி அமைச்சரையும் ஜனாதிபதி நியமித்திருக்கிறாராம்.

வடபகுதியின் அபிவிருத்தியில் பதவிக்குவரும் அரசாங்கங்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாகக் கூறப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களுக்கு ஒருமுற்றுப்புள்ளி வைப்பதற்காக ஜனாதிபதி இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார் என்று சொல்லலாம். ஆனால் இதனை அரச பதவிக்கு வந்தகாலத்திலேயே செய்திருந்தால் நன்றாய் இருந்திருக்கும். என்றாலும் அரசு வடக்கின் அபிவிருத்தியில் அசமந்தமாக இருந்து விட்டது. என்று சொல்லிவிடவும் முடியாது. இந்த அபிவிருத்திகளுக்குப் பொறுப்பாய் இருந்தவர்களின் அசமந்தப்போக்கை அவதானித்த பின்னரே ஜனாதிபதி இந்தப் பொறுப்பினை சிரேஷ்ட அமைச்சர்களின் தலையில் சுமத்தியிருக்கிறார் என்று தெரிகின்றது. என்றாலும் அபிவிருத்திச்சபைகளுக்கான தேர்தல்கள் நடப்பதற்கு இன்னும் சில வாரங்களே பாக்கியுள்ள இந்த வேளையில் இப்படியான ஒரு நடவடிக்கையை அரசு எடுத்திருப்பது பலவிதமான கருத்துக்களுக்கும் இடமளிக்கவே செய்யும்.

அமைச்சர்கள் செய்தால் என்ன அபிவிருத்திச்சபைகள் செய்தால் என்ன இந்தப் பிரதேசம் அபிவிருத்தியடைய வேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டு கருத்து இருக்க முடியாது.

யார் குத்தினால் என்ன அரிசி கிடைத்தால் சரி.

# குற்றச்செயல்களைத் தூண்டும் சினிமா படங்கள்

அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றீகனைக் கொலை செய்ய எத்தனித்த வாலிபர் ஜோன் வேரிங்கலி நடிகையான தமது காதலிக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி றீகனைத் தாம் சுட்டுக்கொன்று விட்டதாககூறியிருக்கிறாராம்.

டாக்சி ட்றைவர் என்ற ஒருபடத்தில் இந்த நடிகை நடித்தாராம். வியட்நாம் போர்வீரர் ஒருவரை அவர் காதலிப்பதாகவும் அந்த வீரர் அரசியல் தலைவர் ஒருவரைக் கொலைசெய்ய சதிசெய்வதாகவும் அதுதோல்வி யுறுவதாகவும் அப்படத்தில் காட்டப்படுகிறதாம் இந்தப்படத்தைப் பார்த்ததின் காரணமாக ஜனாதிபதியைக் கொலைசெய்ய வேண்டும் என்ற எண்ணம் ஹிங்க்லிக்குத் தோன்றி இருக்குமோ என்று இப்பொழுது சந்தேகம் எழுந்துள்ளதாம்.

இதில் உண்மை இருக்கிறதோ இல்லையோ சினிமாப் படங்களைப் பார்ப்பதினால் இளைஞர்கள் உளரீதியாக அனேக மாற்றங்களுக்குள்ளாகிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

குற்றச்செயல்களைச் சித்தரிக்கும் படங்களை அமெரிக்கா போன்ற நாடுகளில் தான் அதிகமாகத் தயாரிக்கிறார்கள் அப்படங்களுக்கு மூன்றாம் உலகநாடுகள் பரந்த வியாபாரச்சந்தையாக விருக்கின்றன. இப்படியான படங்களுக்கு இருக்கும் கிராக்கியைப் பார்த்துவிட்டு சுதேசத் தயாரிப்பாளர்களும் மேல்நாட்டுப்பாணியிலேயே குற்றச்செயல்களையும் பாலியல் உறவுகளையும் மையமாக வைத்துப் படங்களைத்தயாரிக்கின்றார்கள். இவைகளைப் பெரும்பாலும் நமது இளம் சந்ததியினரே பார்க்கிறார்கள். இதனால் இவர்கள் உடல்ரீதியாகவும் உள்ரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

படங்களில் வரும் நடிகர்களைப்போன்று நடை உடை பாவனைகளை மாற்றிக்கொள்பவர்கள் படத்தில் வரும் குற்றச் செயல்களையும் கைக்கொள்ளமாட்டார்களா என்பது என்ன நிச்சயம்!

இப்படியான படங்களைத் தயாரிப்பதற்கு உலக மட்டத்தில் எதிர்ப்பும் கட்டுப்பாடும் ஏற்படுத்தப்படுவது அவசியம்.

# திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர்

(இன்று ஞாயிறு மாலை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்த சபையினரால் நடாத்தப்படும் முனிவரின் 400வது ஆண்டுக் கொண்டாட்டத்தை ஒட்டி வெளியிடப்படும் கட்டுரை.)

ஆ. மகாலிங்கம்
(தலைவர்-ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தசபை)

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் திருநெல்வேலியில் 1580-ம் ஆண்டளவில் அவதரித்தார். தந்தையார் பெயர் காராளபிள்ளை. இவர் நாவலர் பெருமானின் மூதாதையருள் ஒருவர். செல்வமும் செல்வாக்குமுள்ள குடும்பத்திலே அவதரித்த ஞானப்பிரகாச முனிவர் இளம் வயதிலேயே கற்கவேண்டியவற்றைக் கற்று கல்வி கேள்விகளிலே சிறந்து விளங்கினார்.

தம் வாழ்வின் இறுதி நாட்களை சிதம்பரம் சிவகாமசுந்தரி கோயிற் திருப்பணியில் செலவிட விரும்பிய முனிவர் அங்கு சென்று திருத்தொண்டு செய்துவந்தார். சிவகாமியின் திருவருளினாலே புதையலொன்றைப் பெற்ற முனிவர் அங்கு தமது பெயரிலே குளமொன்றையும் கட்டுவித்தார். இவ்வாறு திருப்பணி செய்துவந்த முனிவர் பெருமான் ஒரு பங்குனி மாசப் பூசத்தில் நிஷ்டையில் சிவபதம் அடைந்தார்.

முனிவரின் பணிகளை நினைவு கூரும்வகையில் அவருடைய சமாதி ஞானப்பிரகாச குளத்திற்கண்மையில் கட்டப்பட்டுள்ளது. அன்னாருடைய திருவுருவம் சிதம்பரம் சிவபுரி மடத்தில் இன்றும் வைத்துப் பூசிக்கப்படுகின்றது. முனிவர் எழுதிய சிவஞான சித்தியார் உரை அந்நூலுக்காக எழுந்த எல்லா உரைகளிலும்பார்க்கச் சிறந்ததென பிற்காலத்தோர் பாராட்டியுள்ளனர். அவ்வுரையை இணுவில் நடராச ஐயர் முதன்முதலில் அச்சிட்டு வெளியிட்டார், முனிவரின் வடமொழி நூல்களில் நான்கை 1927-ம் ஆண்டு அவரின் வழித்தோன்றலாகிய க. கைலாசபிள்ளை அவர்கள் வெளியிட்டார்கள். ஆனால் அவற்றின் மொழிபெயர்ப்புக்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை. இந்நூல்கள் எவற்றையும் இன்றைய சந்ததியினர் காணமுடியவில்லை. அவற்றைத் தேடி அச்சிட்டு வருங்காலச் சந்ததியினர்களுக்குக் கையளிக்க வேண்டியது ஒவ்வொரு சைவ சமயியினதும் கடமையாகும்.

ஞானப்பிரகாச முனிவர் பசுவின் பெருமையை உணர்ந்த பரதேசியானவர், அரிய பல சைவ நூல்களை இயற்றி சைவத்தொண்டு புரிந்தவர், தமிழகம் சென்று ஈழநாட்டின் புகழ் பரப்பியவர். இத்தகைய பெருமை வாய்ந்த முனிவரைப் போற்றவேண்டிய அளவுக்கு நாம் இன்னமும் போற்றவில்லை.

அவர் திருவவதாரம் செய்த ஊரில் சமீபத்திற்குள் சில சைவ அன்பர்களின் முயற்சியால் அன்னாரின் ஞாபகார்த்த சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. இந்து சமய விவகாரத்

(6ம் பக்கம் பார்க்க)

# கற்பனையும் காட்சியும்

இளமைதரும் பெருவனப்பால் இவ்வுலகைக் கவர்ந்தும்
எழில் விளங்கும் பொழில்வழங்கும் மலர்தலைக்கே அணிந்தும்
மொழியினுக்கோர் சுவைகலந்து கோகிலமாய்மாறி
முழுஉலகின் நினைப்பிழந்தே கற்பனையாம் உலகில்
தளிதுயரும் காணாதே துள்ளிடும்மான் ஆனாள்
சுந்தரி என்றிடும் பெயரைச் சொந்தமெனக் கொண்டாள்
எழில் முத்தைக் குளிர்நிலவை நினைவுகொளச் செய்வாள்
இவ்வுலகின் அழகெல்லாம் அவளானாள் வியந்தேன்

★

திரைப்படங்கள் அவள் பார்த்தாள் சிறு கதைகள் படித்தாள்
சிறந்த பல ஓவியத்தின் காட்சியெலாம் கண்டாள்
உரைப்பதற்கு நாள்தோறும் புதுப்பொருளை வழங்கும்
உயர்கவிதை எனும் அமுதம் அவள் சுவைக்கலானாள்
வரைக்குலமோ எனத்தகுந்த தோள்கொண்ட ஆண்மை
வாலிபரைத் தானுமிந்த வையமிசை கண்டாள்
வரப்போகும் மணவாளன் இவ்வாறே எனக்கு
வாய்த்திடுவான் எனமனத்தே கற்பனையும்செய்தாள்

★

அவளுக்கே மணமென்றார் அழைப்பதனைத் தந்தார்
ஆவலுடன் மணங்காண அவள் வீடுசென்றேன்
குவளைக்கு நிகரான விழிகொண்ட அந்த
கோதைக்குத் துணைவனென வந்தவனைப் பார்த்தேன்
அவனுக்கு வயதந்தோ அறுபதெனச் சொலலலாம்
விடுத்தாண்டோ இவ்வாண்டோ அவ்வுலகம் சேர்வான்
எவருக்கு எவரென்றே முடிவுசெய்த விதியே
ஏனிந்தக் கொடுமைசெய்தாய் எனக் கண்ணீர் விடுத்தேன்.

புலவர் ம. பார்வதிநாதசிவம்

(முன் தொடர்ச்சி)

# குறையாக இருந்த நாவலை தலைமறைவுக் காலத்தில் எழுதி முடித்தேன்!

'இந்த நாவலை எழுதத் தொடங்கிய காலத்திற்கும்— எழுதி முடித்த காலத்திற்கும் இடையேயுள்ள அனுபவத்தை இங்கு நான் வெளிப்படுத்த வேண்டியுள்ளது. பஞ்சப்பட்ட மக்களின் விடுதலைக்காக நான் உழைத்த குற்றத்திற்காக அரசு இயந்திரம் வலைவீசி என்னைப் பிடிக்க முயன்றபோது பல தடவைகள் நான் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. முன்னர் எழுதிக் குறையாக இருந்த இந்நாவலை இத்தலைமறைவுக் காலங்களில் எழுதி முடித்தேன். அந்த நாட்களில் கிராமங்களில் மக்கள் காட்டிய அன்பும், ஆதரவும், உற்சாகமும் என்னை இதன்பால் நன்கு ஈடுபடவைத்தன. அந்த இன்பமான நினைவுகள் பசுமையாக நிலைகொண்டுள்ளன. இந்த மக்களே எனது எசமானர்கள். அவர்கள் எனக்களித்த பெருமதிப்பு வீண் போகவில்லை. அதற்கெல்லாம் கைமாறாக இந்த நாவலை அவர்களுக்கே கையளிக்கின்றேன். இதைத் தவிர என்னால் ஏது செய்யமுடியும்? தொடர்ந்தும் மக்கள் நெஞ்சங்களில் நான் இருப்பேன். அவர்களிடம் மீண்டும் மீண்டும் நான் படிப்பேன். படித்தவற்றை அவர்களுக்கே திரும்ப வழங்குவேன்.

இந்த நாவலுக்கான மூலக்கருவை வலிந்து தேடும் நிர்ப்பந்தம் எனக்கேற்படவில்லை. இதில் நடமாடும் பாத்திரங்களும் நான் கிருட்டித்தவை அல்ல. இதில் வரும் சம்பவங்களும் கற்பனை லோகத்தில் இருந்து கொண்டுவரப்பட்டவையல்ல. எல்லாம் யதார்த்த உலகில் — அன்றாட வாழ்வில் எளிய மக்கள் என்று கூறப்படும் பஞ்சப்பட்ட மக்கள் தம் மீது சுமத்தப்பட்டுவிட்ட நுகத்தடியைத் தூற்றி எறிந்து தம்மீது திணிக்கப்பட்டுள்ள கோணல் வாழ்வை நிமிர்த்த எடுத்த முயற்சிகள்—நடவடிக்கைகள்—போராட்டங்களில் இருந்து பெற்ற அனுபவங்களே! இந்த அனுபவங்களைப் புடமிட்டு மெருகிட்டுத் தருவதில் கலையம்சத்தைப் பயன்படுத்தினேனே தவிர வலிந்து எதையும் நான் சிருஷ்டிக்கவில்லை. தமிழறிஞர் எனப்படும் சிலரால் நையாண்டி செய்யப்படும் 'இழிசனர்' வழக்கு மொழியில் இந்நாவலைச் சிருட்டித்திருக்கிறேன். இத்தமிழ்ச் சான்றோர் அந்நிய நாகரீகத்தில் மோகம்கொண்டு தமிழைச் சிதைத்தபோதும்— அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் சுகபோகத்திற்காகத் தமிழைச் சீரழித்தபோதும் தங்களின் கோரக் கரங்களை விரித்துத் தமிழை ஆக்கிரமித்தபோதும், ஏகாதிபத்திய அடிவருடிகள் தமிழை மறந்து மறுத்து அந்நிய மொழியால் நையாண்டி செய்தபோதும், பண்டித வித்துவப் பரம்பரையினர் தமிழன்னையை மூடி, முக்காடிட்டு இருட்டறைக்குள் வைத்தபோதும், அத் தமிழன்னையைச் சிறைமீட்டு வெளிக்கொணர்ந்து தேறுதல் கூறி வளர்த்துப் பாதுகாத்தவர்கள் 'இழிசனர்' எனப்படும் பஞ்சமர்களேயாவர். எனவே, இவர்களே இந்த மொழிக்கு எசமானர்களுமாவர். இந்த எசமானர்கள் பேசும் மொழியையே தமிழ் என ஏற்று, எனது பாத்திரங்களுக்குச் சர்வ சுதந்திரங்களும் கொடுத்துப் பேசவைத்திருக்கிறேன். இதனால்; மொழியைப் பயன்படுத்துவதிலும் எனக்குச் சிரமம் ஏற்படவில்லை.''

பஞ்சமரின் நுழை வாயிலில் கூறப்பட்டவைகளின் இச்சுருக்கம் இப்போதைக்குப் போதுமானதென்றே நான் நினைக்கிறேன்.

அடிமைப்பட்டிருக்கும் ஒரு மனிதக் கூட்டத்திற்குஅதற்கான காரண காரியங்களை விளங்கவைப்பது அவ்வளவு கடினமான ஒன்றல்ல. ஆனால் அவர்களை அச்சிறையில் நின்று மீட்டெடுப்பதுதான் கடினமானதாகும். இந்த மனிதர்கள் வாழும் நிலம், அவர்கள் புரியும் தொழில், அவர்கள் படிக்கும் பள்ளி, அவர்கள் உண்ணும் உணவு, நீர், அவர்கள் வணங்கும் கோயில் எல்லாமே அவர்களைக்கட்டியாளும்வர்க்கத்திற்குச் சொந்தமானதாகும். அதற்கும் மேலான விதானை, உடையான், மணியகாரன், காவல்படை, நீதிநிர்வாகம், ஸ்தல ஸ்தாபனங்கள் யாவுமே அந்த வர்க்கத்தினரின் ஆணைக்குட்பட்டவையே! இத்தனைக்கும் நடுவே எல்லாம் இழந்துநிற்கும் அக்கூட்டத்தை அவரவர்களின் இயல்புகளுக்கேற்பவே நகர்த்திவர வேண்டும். எடுத்த எடுப்பில் குதிரைப் பாய்ச்சல் போன்ற நடவடிக்கைகள் தோல்விகளுக்கே வழிவகுக்குமென்பதை மனதிற்கொண்டு அன்றாட வாழ்க்கைக்கூடாகஅவர்களின் அனுபவங்களையே மூலமாகக் கொண்டு, நிரந்தர வெளிச்சத்தைநோக்கி, அவர்களின் பிரயாணத்தை நகர்த்திவர வேண்டும். இதைப் பின்பற்றியே அந்தந்தப் பாத்திரங்களை நகர்த்தி வருவதில் மிகவும் கவனமாக இருந்தேன். என்னையும் மீறிக்கொண்டு எனது மதிப்பிற்குரிய எந்தப் பாத்திரத்தையும் இயல்புக்கு மீறிய அதிவீரசூரத்தனத்தைக் காட்ட நான் அனுமதிக்கவில்லை. பொது நடவடிக்கைகளிலிருந்து நான் பெற்றுக் கொண்ட அனுபவங்களையே பஞ்சமரின் தலைச்சனான ஐயாண்ணன் மேல் படிப்படியாக உருவேற்றி அவருக்கூடாக நலிந்த அக்கூட்டத்தின்மேற் பரவவிட்டு நிதானமாக நாவலை நகர்த்தி வந்திருக்கிறேன்.

முதலில் சுட்டிக் காட்டியது போல, நான் வெறும் இலக்கியமே செய்யும் பார்வையாளனல்ல, வர்க்கம் சார்ந்தவன், அதற்கான அரசியலை ஏற்றுக்கொண்டவன் என்பதனால் பஞ்சமரில் வரும் பாத்திரப் பெயர்களை அப்படி அப்படியே எழுதி அதிகார வர்க்கத்தினரின் காவல்படை, ரகசியப் பிரிவினருக்கு புள்ளி விபரம் கொடுக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்து, சாதி எதிர்ப்பு வேள்விக்குத் தங்களைப் பலியாக்கிக்கொண்டவர்களைத் தவிர ஏனையோரின் பெயர்களை மாற்றி அமைத்திருக்கிறேன். அவர்களில் ஒரிருவரைத் தவிர, மற்றையோர் ஆங்காங்கே இருந்து வறுமை, சாதி அமைப்புமுறைகளுக்கு எதிராக இன்றுவரை செயல்பட்டு வருகின்றனர்.

சாதி அடக்குமுறைகளுக்கு எதிரான சிறு சிறு நடவடிக்கைகளிலிருந்து பஞ்சம மக்களை மேலும் உற்சாகப் படும்படி வழிநடத்தி அவர்களோடொத்த பிரச்சினைகளை உள்ளடக்கிய, முழுமக்களையும் வர்க்க அடிப்படையிலே இணைக்கும் முதல் நடவடிக்கையான- குடியிருப்பு நிலங்களைப் பெறும் ஐக்கியப்பாட்டின் முதற் கட்டத்திலேயே இந்த' பஞ்சமர்' நாவலை முடித்திருக்கிறேன். இந்தத் தொடர்ச்சியிலிருந்து பஞ்சப்பட்ட இந்த மக்கள் கூட்டம் தங்களுக்குள் உள்ளுக்குள்ளாக இருந்துவந்த சிறு பரிமாண வரம்புகளை உடைத்துக்கொண்டு சகலதிற்கும் மேலாக நிற்கும் பெருவரம்பை அழிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் வரையில் இதன் இரண்டாவதுபகுதியை எழுதி முடித்துவிட்டு உரிய முறையில் அச்சேற்றுவதற்காகக் காத்திருக்கிறேன்.

## கே. டானியல்

இதன் தலைமைப் பாத்திரங்களைப் பொறுத்தவரையில் சில குறிப்பிட வேண்டியுள்ளன. ஒரு கதையின் தலைவன் புனிதத்தின் திரு உருவமாகவும், நேர்மையின் பிறப்பிடமாகவும், சீரான வாழ்க்கைக்குட்பட்டவனாகவும் இருக்கவேண்டுமென்பது மரபுமுறையென வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. இம்மரபிற்கு முற்றும் வேறுபட்டுள்ள விதத்தில் ஐயாண்ணன் என்னும் தலைச்சன் பாத்திரத்தை ஒரு கள்ளுக்கடையிலிருந்து தான் பிறப்பித்தேன். அதன் இளந்தலைமுறை நாயகனை குமாரவேலன் என்பவனை தவறிப் பிறந்த ஒருவனாகச் சிருஷ்டித்தேன். மற்றும் இட்டிணன், சின்னாச்சி செல்லப்பன் முத்து, மாணிக்கன், கணேசன், சின்னான், கணபதி, வல்லி, சந்தியா போன்றவர்களை மேல்தட்டு வர்க்கத்திற்கு மிகவும் விசுவாசமுள்ள-நம்பிக்கைக்குரியவர்களாகவே இருப்பவர்களாகவே சித்தரித்தேன். ஆனாலும் அவர்கள் எல்லோரையும் ஒருமைப்படுத்துவதற்கான விதத்தில் அவர்களின் நடைமுறை வாழ்க்கையோடு சேர்த்தே நாவலின் பிரதான பங்கை வகிக்கச்செய்தேன்.

வேலுப்பிள்ளைக் கமக்காரன், கிருப்பர், கமலாம்பிகை அம்மாள், மாம்பழத்தி ஆகியோர்களை ஒன்றிணைந்த மேல்தட்டு வர்க்கத்தின் மொத்த உருவங்களாக்கி அவர்களின் ஆசாபாச எண்ணங்களை வெளிக்கொணர்ந்து நான் எதிர்த்து வரும் வர்க்கத்தின் உண்மை வடிவங்களை விளங்க வைக்கும் முறையில் நாவலை நகர்த்தி வந்திருக்கிறேன்.

பஞ்சமர் வெளிவந்தபோது இது மிகவும் துணிச்சலான முயற்சி என்று சிலர் பாராட்டினர்.

'தடுப்புக் காவலிலிருந்து வந்ததும் அவசர அவசரமாக இதை வெளியிட்டிருக்கவேண்டியதில்லை; மிக அவசரவேலை; தற்கொலைக்கு ஒப்பானது என்று பலர் பயங்காட்டினர்.

'கிராமப்புற மக்களைப் பலியிடவும், தமிழ்ச் சமூகத்தைச் சீர்குலைத்து சிங்கள இன வெறியர்களுக்கு தீனி போடும் அரசியலே சதி முயற்சி இது; என்று பலர் குரல்வைத்தனர்.

விமர்சனப் புலிகள் பல சீற்றம்கொண்டு பாய்ந்தன. இவற்றையெல்லாம் கூட்டிக் கலந்து "இலக்கியத்திற்கே முதன்மையான அழகியலற்ற ஒரு மாமிசக் கட்டி' என்ற முத்தாப்பையும் வைக்க மேல் தட்டு வர்க்கப் பிரதிநிதிகள் தவறவில்லை.

இன்றுவரை இந்த அழகியல் என்று இவர்கள் குறிப்பிடுவது எது என்பதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை

படிப்பு வாசனையற்ற கோடானுகோடி மக்களின் புலன்களுக்கெட்டாத விதத்தில் மூலக் கருவின் புறப்பாட்டைத் திரையிட்டுமறைக்கும் விதத்தில் மாயாஜால மந்திர மாளிகை ஒன்றை வார்த்தைக் கோளங்களைக் கொண்டு கட்டுவதையே இவர்கள் அழகியல் என்று கருதுகின்றனரா? அப்படியானால் நிச்சயமாக இவர்கள் என்னை முதல் வாதத்தில் பிதாமகனான 'மால் தூசியனின்' சிஷ்யர்களே என்பது உறுதியாகிறது.

வலிந்தவனுக்கும் மெலிந்தவனுக்குமிடையே நடக்கும் போரில் நடுநிலைப் பார்வையாளனாக விமர்சகனாக நின்று அதில் அழகியலைக் காணமுற்படுவதை ஏதாவது ஒரு செயல்பாட்டுடன் ஒட்பிட்டுக் கூறவேண்டியதில்லை. என்றே நினைக்கின்றேன்.

அழகியலைப் பலப்படைவதற்கெனத் தொடங்கி அதற்கு வாலைப்பருவ ஆண் - பெண் உடல் உறவுகளை மூலதனமாகப் போட்டு அதிலிருந்து பிறக்கும் அசிங்கங்களிலெல்லாம் தெய்வீகம் கண்டு வந்தவர்களும் - வருபவர்களும்

சாதாரண கிராமப்புற மக்களால் ஆளப்படாத பேச்சு வழக்கை வலிந்து புகுத்தி, தான் புலமை பெற்றுள்ள ஆங்கிலப் பதங்களின் மூலம் தமிழுக்கு ஓசைவடிவங்கண்டு தமிழுக்கு சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுத்தர முயற்சிப்பவர்களும்,

மக்களுக்குப் புரிந்துகொள்ள முடியாமல் படைக்கப்படும் இலக்கியங்களுக்குள் 'தேடுதல்' நடத்தி அந்த இலக்கியக்காரர்களுக்குத் துதிபாடுபவர்களும்,

நடைமுறைச் சாத்தியமற்ற கற்பனை லோக சஞ்சாரப் படைப்பாளிகளும்,

முன்னேறிச் செல்லும் மக்களைப்பின்னின்று இழுத்தும் மக்கள் தயாராக இல்லாத விடத்து மக்களைப் பின்விட்டு வெகுதூரம் முன் செல்பவர்களும் - மொத்தத்தில் சிந்தனை முதல்வாத மூல பிதா 'மால் தூசியனின்' விசுவாசமுள்ள இலக்கியச் சிஷ்யர்களேயாவர்.

வறுமைக்கும் சாதிமுறைக்கும் எதிரான இலக்கியங்களைப் படைப்போர் அதற்கு உட்பட்ட மக்களைப் படித்து அவர்களின் படிப்பினைகளிலிருந்து அவர்களுக்கான இலக்கியங்களைப் பெற்றெடுக்க முயலும் அதேவேளை மேலே காட்டப்பட்ட சிந்தனை முதல்வாத இலக்கியக்காரர்களையும் நடைமுறை அடிப்படையிலே எதிர்த்துப் போராடியே ஆகவேண்டும்.

இது ஒரு நீண்டகாலப் பயணமாகும். இந்தப் பயணத்தில் நல்மனது கொண்ட சகலரும் எங்களுடன் இணைவர்.

நான் விரும்புவதெல்லாம் தனிமனிதனுக்கான சகல சுதந்திரங்களையும் அளித்து, எல்லோருக்கும் எல்லாமான சுதந்திரத்தைப்பெறுதல் என்பதேயாகும்.

(முற்றும்)

## திருநெல்வேலி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட 'சிவராத்திரி மகிமை' என்ற நூலில் முனிவரின் திருவுருவப்படமும் சிதம்பரத்தில் அன்னார் நிறுவிய குளத்தினதும், மடத்தினதும் புகைப்படங்களும் பின்னிணைப்பாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பழுதடைந்திருக்கும் குளத்தையும் மடத்தையும் திருத்துவதற்கும் மேற்படி திணைக்களம் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அறிகின்றோம். முனிவரின் திருச்சிலையொன்றை நிறுவவும் அவரின் நூல்களைப் பெற்று அச்சிட்டு வெளியிடவும் அன்னாரின் ஞாபகார்த்த சபை எண்ணியுள்ளது. இப்பணிகளுக்குச் சகல சைவ மக்களினதும் தாபனங்களினதும் ஒத்துழைப்பைச் சபை எதிர்பார்க்கின்றது.

## சமூகத் தொண்டன்

சமூகத் தொண்டன் பல்சுவை மாத இதழ் மாசித் திங்கள் (1981) முதல் வெளிவருகிறது. சமூகத்தொண்டன் என்ற இனிய தொடரைத் தனது பெயராகக் கொண்ட இந்த மாத இதழ், கலைஇலக்கிய ஆக்கங்களுக்கு ஊக்கமளித்தல், நாடகத்துறை வளர்ச்சிக்கு ஆதரவளித்தல், சன சமூக நிலையங்களிடையே தொடர்பினை ஏற்படுத்துதல், தேசிய விளையாட்டுக்குப் புத்துயிரளித்தல். கிராமிய நிர்மாணத்துக்கு உதவுதல் முதலிய நல்ல பல இலட்சியங்களைக்கொண்டு விளங்குகின்றது.

மரபுவழி நாடகங்களுக்கு உயிரளித்துவரும் நடிகமணி வி. வி. வைரமுத்து "நாடகக் கலையும் சனசமூக நிலையமும்'' என்ற கட்டுரையை எழுதியுள்ளார். அவருடைய கட்டுரையில் ''இன்று தளரும் நிலையில் இருக்கும் மரபுவழி நாடகங்களைக்கூட சனசமூக நிலையங்கள் பயிற்றுவித்தும் அரங்கேற்றியும் மக்களுடைய மனதில் இவ்வழிநாடகங்களின் சிறப்பைப் பதியவைத்துவருவது பாராட்டப் படவேண்டியதாகும்'' என்றவாசகம் சனசமூகங்களின் ஆக்கபூர்வமான கலைப்பணிக்குஎடுத்துக்காட்டு.

பண்டிதர் ஆசிநாதரின் வாழ்த்துக்கவிதையும் வைத்திய கலாநிதி இராசசிங்கம் தெய்வேந்திரன் மு. பொன்னம்பலம், சி. சின்னத்தம்பி, உரதராசா, முதலியார் வை. மகேசன், க. வி. விக்னேஸ்வரன் ஆகியோரின் கட்டுரைகளும், கு. பரராஜசேகரத்தின் கவிதையும் இடம்பெற்றுள்ளன.

வி. சு. துரைராசா. ச. ம. தவராசா ஆகியோரை இணை ஆசிரியர்களாகக் கொண்டுள்ள சஞ்சிகை சமூகத்தொண்டன்.

●

## 'வாகை'

"கலை இலக்கியம் எல்லாம் பரந்துபட்ட பொதுமக்களுக்குரியவை. அவர்களின் உபயோகத்திற்கு, வளர்ச்சிக்கு, செயலூக்கத்திற்குரியவை'' என்ற குரலுடன் 'வாகை' சஞ்சிகை வெளிவந்துள்ளது.

கலை, இலக்கிய, விமர்சன சஞ்சிகையாக விளங்கும் வாகையில் கதைகளும் கட்டுரைகளும்கவிதைகளும்இடம் பெற்றுள்ளன.

உயிர் உள்ள உரையாடல்களைக் கொண்ட "மயக்கங்களும்'' என்னும் ஞானரதனின் இனிய சிறுகதையும் ''மத்தியானத்துக்குச் சற்றுப் பின்பாக'' என்னும் சகாய புத்திரனின் கருத்தமைந்த சிறுகதையும் இடம்பெற்றுள்ளன.

'வரப்புயர நீருயரும்' என்ற பழைய பாடலை வைத்துக் கொண்டு மண் உயர மார்க்கம் என்ற தலைப்பில் சில்லையூர் செல்வராசன் எழுதிய அருமையான கவிதை ஒன்றும் வேறு பல கவிதைகளும் இச் சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன.

வி. ரி. இளங்கோவனை ஆசிரியராகக்கொண்டிருக்கும் இந்தச் சஞ்சிகையில் பல கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

வாகையின் முன்னுரையில் "மக்களுக்கான கலை இலக்கியத்தை மக்கள்மத்திக்கு எடுத்துச் செல்லும் சகலவிதமான தயாரிப்புகளோடும் தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் வாகை வரத் தொடங்கியுள்ளது' என்று கூறப்பட்டுள்ளது.

நல்ல இலட்சியங்களோடு தொடங்கி இருக்கும் 'வாகை' சஞ்சிகை உலகில் 'வாகை' சூடுமென நம்பலாம்.

—சிவம்

# "ரேவிங் ராஜு" போய்விட்டார்!

"ரேவிங் ராஜு" என்று அரசியல் - ராஜீய வட்டாரங்களில் அன்போடு அழைக்கப்பட்டவர் காலஞ்சென்ற திரு. ராஜு குமாரசாமி.

இலங்கை அரசின் பிரதிநிதியாக உலகநாடுகளுக்கு தலைநகருக்கு தலைநகர் அசுரவேகத்தில் விமானப்பயணம் செய்து பணியாற்றியதால் இளமைக் காலத்தில்திரு. குமாரசாமிக்கு இந்தப்பட்டப்பெயர்வழங்கிவந்தது அந்தக்காலத்தில் விமானத்திலேயே அவர் வாசம் செய்ததாகக்கூடச் சொல்வார்கள். உடுப்பு மாற்றுவதும் உணவு அருந்துவதும் கூடவிமானத்தில் அல்லது விமானநிலையத்தில்தானும். அந்த அளவுக்கு அவர்மீது அப்போதைய அரசு நம்பிக்கை வைத்திருந்தது. அவரும் அந்தவிதமாகப் பணிபுரிந்தார்.

மறையும்போது அவருக்கு 66 தான் வயது. இது அவ்வளவுபெரியவயதில்லை. இதைவிட வயதில் கூடியவர்கள் திடகாத்திரமாக இருந்துவருகிறார்கள். திரு. குமாரசாமியின் மறைவு நிகழ்ந்த சூழ்நிலை எவருக்கும் கவலையளிப்பதாகும்.

பணியகத்தில் கழிவு அறைக்குச் சென்றவர் வெகுநேரம் வெளியில் வராமையால் சக அலுவலர்கள் கதவில் தட்டினார்களாம். அரவம் இல்லை. பின்னர் கதவு உடைக்கப்பட்டபோது அவர் மயக்கநிலையில் நிலத்தில் கிடந்துள்ளார். எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மாரடைப்பினால் அவர் மரணமாகியுள்ளார். இல்லையெனில் இன்னும் பல ஆண்டுகளுக்கு அவரது பணி நாட்டுக்குக் கிடைத்திருக்கும்.

திரு. ராஜு குமாரசாமியின் தந்தையாரான திரு. சி. குமாரசாமி முன்பு யாழ்ப்பாணத்தில் மாவட்ட நீதவானாகவும் பின்னர் அரசாங்க அதிபராகவும் கடமை புரிந்துள்ளார். முன்னைய செனட்சபை உறுப்பினராகவும் இருந்துள்ள அவர் இறுதிக் காலத்தில் இந்தியாவில் இலங்கையின் உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றினார்.

திரு. ராஜு குமாரசாமி இலங்கை அரசில் உயர்பதவிகளை அலங்கரித்ததுபோலவே ஐ. நா. வில் பல உயர்பதவிகளைச் சிறப்புடன் வகித்துள்ளார்.

1971ம் ஆண்டு ஐ. நா. வின் வளர்ச்சித்திட்டத் துறையின் உதவிக் கணிப்பாளராகப்பணி புரிந்தார். அதே ஆண்டில் ஆசியாவுக்கும் தூரகிழக்கு நாடுகளுக்குமான ஐ. நா. வின் பிராந்திய சபையின் இயக்குனராக விளங்கினார். 1961ல் ஐ. நா. தொழில்நுட்ப உதவிச்சபையின் நிகழ்ச்சி டைரக்டராகப்பணிபுரிந்தார், 1951ல் கொழும்புத்திட்டத்தின்கீழ் தெற்கு தென்கிழக்காசியாவுக்கான தொழில் நுட்ப ஒத்துழைப்பு சர்வதேச சபையின் தலைவராகவிருந்தார். எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அரசுக் காலத்தில் சோவியத் யூனியனோடும் கம்யூனிஸ்ட் சீனவோடும் ராஜீய உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதற்காகச்சென்ற தூதுக்குழுவில் இவரும் இடம் பெற்றிருந்தார்,

தமது 23-வது வயதிலிருந்து அவர் அரசசேவையில் ஈடுபட்டுவந்துள்ளார். கொழும்புத்திட்டத்தின்கீழ் 6 கோடி ரூபாய் கடன்உதவியொன்றை இலங்கைக்குப் பெற்றுத் தருவதில் அவரே பெரும் பங்கேற்றதாகக் கூறப்படுவதுண்டு. சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராய் இருந்தகாலத்தில் நிதி

(9 ம் பக்கம் பார்க்க)


# நெஸ்பிரே அருந்தும் இவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது!




இதோ, மீண்டும் கிரிக்கெட் மைதானத்தில்!
மென்பந்தில் இடுப்பு உயரத்திற்கு வேகப்பந்து வீசியும்
வளவுக்கு வெளியே 'சிக்சர்கள்' அடித்தும் இந்தச்
சிறுவர்கள் தமது சக்தியை வெளிப்படுத்துகிறார்கள்...

உங்கள் செல்வப் பிள்ளைகள் கிரிக்கெட்
மைதானத்திலும் வாழ்க்கையெனும் உலக
அரங்கிலும் சுறுசுறுப்பு மிக்கவர்களாக
விளங்க குழந்தைப் பருவத்திலிருந்தே
அவர்களை ஆயத்தஞ் செய்யுங்கள்...

விட்டமின் 'ஏ', 'டி' சத்துகளுடன் 28 சதவீத
கொழுப்பும் கொண்ட நெஸ்பிரேயில்
அவர்களைத் திடகாத்திரமாக வளருங்கள்.
அதன் மேலதிக கிறீம் சுவையை அவர்கள்
நிச்சயம் விரும்புவார்கள். பால் அருந்தும்
இடைவேளை—அதுதான் நெஸ்பிரே நேரம்!




| |
|---|
| 400 கிராம். ரூ. 20/60 |
| ஒரு கிலோ ரூ. 61/75 |

நெஸ்பிரே
வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

Nestlé®
ஒரு நெஸ்லே தயாரிப்பு

Grant K & E 3389

# போஷாக்கும் விவசாய அபிவிருத்தியும்

எமது நாட்டின் விவசாய அபிவிருத்தியை ஆராய்ந்தால் கடந்த 30ஆண்டுகளாக கையாளப்பட்ட முறைகளுக்கும்எமது போஷாக்குள்ள உணவு உற்பத்திக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்றுதான் கூறலாம், எமது விவசாய அபிவிருத்தி நாட்டின் பிரதான தேவைகளை வந்தால் எமது இயற்கை வளங்கள் பெருமளவு பாதிக்கப் பட்டுவரும்காலங்களில் பயனற்றுவிடும்.

எமது நாட்டின் விவசாயம் பண்டைக்காலத்தில் அதி உன்னதநிலையில் இருந்தது. நீர்வளங்கள், நிலவளங்கள், வனவளங்கள், மலைச்சாரல்கள் யாவும்


**ஆர். டி. கருணைராஜன்**

(கிரந்தீபம் அதிபரும், சர்வதேச இயற்கை விவசாய சம்மேளனத்தின் நிர்வாக சபை அங்கத்தவர்)


சமாளிப்பதற்காக இயங்காமல் உல்லாசப் பொருட்கள் தயாரி பண்ணும் தொழிற்சாலைகளையும், ஏற்றுமதிச்சந்தைகளையும் ஆதரிக்கும்முகமாக இயங்கி வருகின்றன.

பிள்ளைகளின் போஷாக்குத் தேவையை உணரும்பொழுது நாம் எமது உணவு உற்பத்தியில் இதைக் கவனிப்பதாஇல்லை, கொழுப்புச் சத்து நிறைந்த பாரமான உணவுகள் மட்டும் எமது தேவைகளை பூர்த்திபண்ணும் என்ற எண்ணம் பொதுமக்கள் மனதில் இருக்கலாம் அல்லது அதிக செலவுடன் மேல்நாடுகளில் பண்படுத்தப்பட்ட பொருள்களே இந்தத் தேவையைப் பூர்த்திபண்ணலாம் என்ற ஒரு தரப்பு அபிப்பிராயம் இருக்கலாம்.

இறந்த தருந்தமுறையில் பயன் படுத்தப்பட்டது. மக்களின் அத்தியாவசியப் பொருட்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் 16ம் நூற்றாண்டுக்குப் பின்னர் பல மாற்றங்கள் அரசியல்ரீதியில் ஏற்பட்டதால் எமது விவசாயமும் பாதிக்கப் பட்டு, எமது சிறந்த உற்பத்தியாளர்களர்கிய கிராமிய மக்க

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

மாணவமணிகளுக்கு எமது உளங் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பூரிப்பு அடைகிறோம்.

இல்லை. இவர்கள் அறிந்திருக்கும் விவசாயம் மேல்நாடுகளில் எழுதப்பட்ட புத்தகங்கள் மூலமேயாகும். நிபுணர்கள்என்று கொழும்பிலே கடமையாற்றும் உயர் அதிகாரிகள் இங்கிலாந்து அமெரிக்கா போன்ற தேசங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் மேல்படிப்புகளைப் படித்துவிட்டு சூடான பிராந்தியமாகிய எமது நாட்டின் விவசாய அபி விருத்திக்கு பொருந்தாத முறைகளைத் திணிக்கப்பார்க்கிறார்கள்.

இவர்கள் எமது நாட்டைப் பற்றியோ, அல்லது எமது நீர் நில வளங்களைப்பற்றியோ அல்லது எமது கிராமிய முறைகளைப்பற்றியோ அதிகமாக அறியாமல் இருக்கின்றார்கள் என்றே கூறலாம், கொழும்பில் இருக்கும் குளிரூட்டப் பட்ட கந்தோர்களில் இருந்து நாட்டின் விவசாய அபிவிருத்தித்திட்டங்களை சுலபமான முறையில் ஆயத்தங்கள் செய்வதே இவர்களுடைய முக்கியமான கடமையாக இருப்பதா

# விண்வெளியில் சர்வதேச ஒத்துழைப்பு

பூமியின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதில் விண்வெளி வகிக்கும் பாத்திரம் மேன்மேலும் அதிகரித்துவருகிறது. இதுவரை சீதோஷ்ணவியல், செய்திப்பரிவர்த்தனை, கடல் போக்குவரத்து ஆகிய துறைகளில் பெரும்பயன்கள் ஈட்டப்பட்டுள்ளன,

இப்போது விண்வெளியின் இயற்கை வரலாறும் தொழில் நுட்பமும் பெருப் முன்னேற்றமடைந்துள்ளன, விண்வெளி ஆராய்ச்சிக்கு அதிக நிதிகளும் விஞ்ஞான, தொழில் நுட்பவளங்களை ஒருங்கிணைப்பதும் அவசியம். இந்த சர்வதேச ஒத்துழைப்பு விஸ்தரிக்கப்படுவது இன்றியமையாதது.

அப்பலோ—சோயுஸ் விண்சப்பல்களின் பயணம் அமெரிக்க-சோவியத் ஒத்துழைப்புக்களைத் தொடக்கிவைத்தன. சீதோஷ்ணவியல் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பிரஞ்சு - சோவியத் விண்வெளி ஒத்துழைப்புக்களினால் ஏற்பட்டதே.

1966-ல் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் சீதோஷ்ணவியல், செய்திப் பரிவர்த்தனைத் துறைகளில் கூட்டு ஆய்வுகளுக்கும் பரிசோதகர்ளுக்குமான உடன்பாடுகள் ஏற்பட்டன.

பகுதிகளை அறிவதற்குதவுகின்றன. விண்வெளித் தொழில் நுட்பத்தின்மூலம் சூழல் அசுத்தமடைவதைக் கட்டுப்படுத்தலாம்.

(9-ம் பக்கம் பார்க்க)

## சிந்தைக்கு மகிழ்வூட்டும் சித்திரைப்பிறப்பு

புத்தாண்டின் பிறப்பை உலகிலுள்ள மக்கள் அனைவருமே கொண்டாடிவருகின்றனர். ஆனால் அந்தந்த தேசத்தின் பண்பாட்டிற்கமையக் கொண்டாடும் முறைகளிலே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பதற்கிணங்க ஒரு வருடம் முடிந்து மறு வருடம் பிறக்கும்போது அதனை ஆவலுடனும், மகிழ்வுடனும் வரவேற்கின்றோம்.

'புது வருடத்திலாயினும் பசியும், பிணியும் நீங்கி மகிழ்வுடன் வாழ புத்தாண்டு வழி வகுக்கும் என்ற எண்ணத்துடன் மக்கள் சித்திரைப் பிறப்பை இருகரம் நீட்டி வரவேற்கின்றனர்.

புத்தாண்டுத் தினத்தில் மக்கள் மருத்து நீர் தேய்த்து நீரரடி, புத்தாடை புனைந்து ஆலய வழிபாடு செய்வர். சூரியனுக்குப் பொங்கலிட்டு அறுசுவையோடு சிற்றுண்டி உண்பர். பின்னர்சுபவேளை பார்த்து சிறுவர், பெரியார் அனைவருக்கும் கை விஷேடம் வழங்குவர். நண்பர், உறவினர் வீடுகளுக்குச் சென்று விருந்துண்டு மகிழ்வர்.

புத்தாண்டு தினத்தை ஒட்டி போர்த்தேங்காய் அடித்தல், கிளித்தட்டு முதலிய விளையாட்டுக்களும் இடம்பெறுகின்றன. சில இடங்களில் மாட்டு வண்டிச் சவாரி முதன்மை இடம் பெறுகின்றது இங்களவர்களும் தமிழரும் ஒரே தினத்திலேயே புத்தாண்டுப் பிறப்பைக் கொண்டாடுகின்றனர். இது இவ்விரு சமூகத்தவரிடையேயும் ஒற்றுமையை வளர்த்து எல்லோரையும் எவ்வித பேதமுமின்றி ஒன்துபடுத்துகின்றது.

விஜுசிராசன் தளையசிங்கம்
யூனியன் கல்லூரி.

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

பாரமான உணவு வகைகளாக இருந்தாலும் அரிசி, சிறுதானியம், மரவெள்ளி போன்ற பொருட்கள் எமது காபோவைதரேற்று தேவைக்கு நம் நாட்டின் இராமிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மிகவும் முக்கியமான உணவுப் பொருட்கள் ஆகும். இப் பொருட்களின் உற்பத்தியை ஒரு சிறிதளவு பெருப்பித்தால் எமது உணவுப் பிரச்னையை இலகுவாக சமாளிக்கலாம்.

இப்பொருட்களினது அபிவிருத்திக்கு செலவு அதிகமாக உண்டுபண்ணும் காரணிகளான நவீன களஞ்சிய சாலைகள், விலைஉயர்ந்த இயந்திரங்கள், இறக்குமதிசெய்யப்பட்ட வித்துகளி, இரசாயன பசளை வகைகள், இரசாயன கிருமி நாசினிகள் போன்றவை தேவை இல்லை என்றே சொல்லலாம். இன்றைய உணவின் கடும் விலை உயர்வுகளுக்கும் இவைகளே மூலகாரணமாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல இத்தகைய முறைகளில் விவசாயத்தை அபிவிருத்திசெய்து

ளும் மிகவும் கஷ்டங்களுக்குள்ளாக்கப்பட்டனர். எமது நாடு சுதந்திரமடைந்து 30 வருடங்களுக்கு மேலாகியும் எமதுநாட்டில் சுலபமாக உற்பத்தி செய்யப்படத்தக்க போஷாக்குச் சக்தி மிகுந்த சிறுதானியங்கள் குரக்கனுட்பட கிழங்கு, அவரை, பழவகைகள் எமது அபிவிருத்தி வலைகளில் அகப்படாமலே இருக்கின்றன. அது மட்டுமல்ல கால்நடை, கோழி வளர்த்தல், பாற்பொருட்கள் பதப்படுத்தல் எல்லாம் எமது முன்னோரால் மிகவும் திறமையாகக் கையாளப்பட்ட முறைகளாகும். தற்பொழுதும் எமது கிராமப்பகுதிகளில் தகுந்த முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யத்தக்க வசதிகளிருந்தும் அரசாங்கத்தின் ஆதரவின்றி கவனிக்கப்படாமல் இருக்கின்றன.

ஆனால் இம்மக்கள் மத்தியில் உணவு, விவசாயப் பகுதியில் இருந்து அரசாங்க ஊழியர்களாக வேலைசெய்பவர்கள் இப்படிப்பட்ட திறமான முறைகளை அறியாமல் இருப்பதுமட்டுமல்லாமல் இவைகளை அறியவிரும்புபவர்களாகவும்

கத் தெரிகின்றது. எமதுநாட்டின் விவசாய நிபுணர்கள் எமது கிராமங்களிலேயே வசிக்கின்றார்கள் என்று திட்டவட்டமாகக் கூறலாம். ஆனால் இவர்களின் எண்ணிக்கை குறைந்தே வருகின்றன. அதே நேரத்தில் உணவு நெருக்கடி அதிகரித்து வருவதில் ஆச்சரியமே இல்லை. இதனால் எமக்கு சமீபகாலங்களில் நடந்துவரும் ஒரு பெரிய பிரச்சினை என்னவெனில் இலாபத்தைக் குறிக்கோளாக வைத்து சர்வதேச ரீதியில் இயங்கிவரும் ஒருசில விவசாய ஸ்தாபனங்களுக்கு அடிமையாகி வருவதேயாகும். மூன்றும் உலகநாடுகளின் பல கோடிக்கணக்கான மக்கள் இப்படிப்பட்ட ஒரு பொறியில் அகப்பட்டு இருப்பது அவர்களின் வளரும் வறுமைக்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இயற்கைமுறைகளைக் கையாண்டுவந்த எமது சிறந்த பரம்பரை விவசாயிகளுக்கு விலை அதிகமுள்ள செயற்கைமுறைகள் தேவையில்லை,

உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் தண்ணீர் அதிகம் தேவையான பயிர் வகைகளை உற்பத்திசெய்வது ஒரு தவறான முறையாகும். கோடைகாலங்களில் பருப்பு வகைகள், கிழங்குவகைகள் மற்றும் வசதியான இடங்களில் சிறுதானியங்கள் வளர்ப்பது எமது போஷாக்குத் தேவைகளைப் பூர்த்திபண்ணுவதுமட்டுமல்ல எமது நிலங்களுக்குத் தேவையான சத்துக்களையும் கொடுக்கும். மேய்ச்சல் ஆடுகளாகிய செம்மறி ஆட்டுக்கூட்டங்கள், வீடுகளில் ஆடுகள், மாடுகள், கோழி வளர்ப்பது நாம் அறிந்திராத முறைகள் அல்ல. அந்நிய ஆட்சியின் கீழ் ஆங்கிலப் படிப்பின் மூலம் அரசாங்க உத்தியோகங்களை நாடிச்சென்றதால் எமது பொருளாதார வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டது.

பிறநாட்டு உணவுப்பொருட்களின்மூலமும் உல்லாசப் பொருட்களின்மூலமும் எமது தேவைகளைப் பூர்த்திசெய்யலாம் என்று எண்ணியிருந்தோம். ஆனால் இன்று எமது நாட்டின் அத்தியாவசியபொரு

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருநாடுகளின்சீதோஷ்ணவியல்துறை விஞ்ஞானிகளும், எம். ஆர் - 12 என்ற ராக்கட்டுகளை விண்வெளிக்கு அனுப்பியதன்மூலம் இந்த ஆய்வுகளைத்தொடக்கிவைத்தனர். இந்த ராக்கட்டுகள் எடுத்துச்சென்ற உபகரணங்களில் ஒருபகுதி பிரான்சிலும், ராக்கட்டுகள் சோவியத் யூனியனிலும் தயாரிக்கப்பட்டவை.

தொடர்ந்து 1973ல் இந்து சமூத்திரத் தீவான செர்து லெனினிலிருந்து காலநிலை ராக்கட்டுகள் அனுப்பிவைக்கப்பட்டது இதன் இரண்டாவது கட்டமாகும். சோவியத் ஆய்வுக்கப்பல்களிலிருந்தும் கயானாவில் உள்ள பிரெஞ்சு சோதனைத் தளங்களிலிருந்தும் அனுப்பப்பட்ட ராக்கட்டுகளின் வழியே இக்கூட்டுப் பரிசோதனை தொடர்ந்து நடைபெற்றது.

செய்திப்பரிவர்த்தனைத் துறையிலும் இந்த இருநாடுகளும் ஒத்துழைத்து வருகின்றன. டெலிவிஷன், தந்திச் சேவை, ஸ்புட்னிக் தகவல் செய்மதிகளின் வழியே புதிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மொல்னியா என்ற செய்மதியின் வழியே இவ்விரு நாடுகளின் செய்திச்சேவை நடைபெறுகிறது.

பூமியின் தொலைதூரப்பகுதிகளை விண்வெளியிலிருந்து ஆராய்வதுதான் விண்வெளி ஆய்வின் பிரதான நோக்கமாகும். இது லாபகரமானதும் கூட.

இன்று தமது சுற்றுச்சூழல் அசுத்தமடைவதுகுறித்து சகல நாடுகளுமே கவலைகொண்டுள்ளன. விண்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சூழல் அசுத்தமடைந்துள்ள

ளின் உற்பத்தி குறைந்த நிலையில் இருப்பதால் நாம் யாவரும் உலகசந்தையின் விலை ஏற்றங்களால் மிகவும் பாதிக்கப்பட்டுவருகிறோம்,

இதற்கு ஒரேஒருவழி உண்டு. அது என்னவெனில் எமக்கு உகந்த விவசாய முறைகளைப் பேணி வளர்த்து வருவதே ஆகும், இது எம்மால் இயலும்.

## வருவாய் புத்தாண்டு

வருவாய் வருவாய் புத்தாண்டே
தருவாய் வாழ்வும் வளம்யாவும்
வருவாய் வருவாய் புத்தாண்டே
வையம் எங்கும் பொலிவுறவே.

★ ★ ★

தொழில்கள் எல்லாம் ஓங்கிடவும்
தொல்லை யாவும் நீங்கிடவும்
பொழில்கள் பூத்துக் குலுங்கிடவும்
வருவாய் வருவாய் புத்தாண்டே.

★ ★ ★

செந்நெல் பெருகிச் செழிப்புறவும்
செகத்தோர் நித்தம் களிப்புறவும்
மின்னல் இடையார் மகிழ்வுறவும்
வருவாய் வருவாய் புத்தாண்டே.

★ ★ ★

பொங்கல் செய்து பூரிப்போம்
புதுமைத் தமிழிற் பாச்செய்வோம்
எங்கும் இன்பம் பொலிகவென
இதயம் குளிர இயம்பிடுவோம்.

—பாரதி
மகாஜனக் கல்லூரி. தெல்லிப்பழை.

## புத்தாண்டுச் சிரிப்பு

ராமு: ராஜா நீ ஏன்டா இந்த முறை உடுப்பொன்றும் தைக்கவில்லை?

ராஜா: ரெயிலர் தைச்சபடியால் நான் தைக்கவில்லை.

★ ★ ★

ஒருவர்: என்ன கையிலே ருகல்மொட் டோடை வாறியள்.

மற்றவர்: இந்த முறை புது வருடத்திற்கு கெல்மெட், அடுத்த வருடப்பிறப்பிற்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கவேண்டும்.

★ ★ ★

மஞ்சுளா: என்ன துணி இந்தமுறை உங்கடை வீட்டைபுதுவருடத்திற்கு என்ன ஸ்பெஷல்?

துஷி; எங்கடை வீட்டு நாய் 6 குட்டி போட்டிருக்கு.

முத்தர்: இந்த ஆண்டு புது வருடம் 13-ம் திகதி பிறக்கிறதென்று சில பத்திரிகைகளும் 14-ம் திகதி என்று வேறு சில பத்திரிகைகளும் எழுதுகின்றனவே. என்ன செய்யப் போகிறீர்?

செல்லர்: நான் சரியாக நடுநிசி 12 மணிக்கு மருத்து நீர் வைத்துத் தோயப்போகிறேன்.

இ. இரட்ணராஜ்
யாழ்/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.


கடைசித் தினம் 19-4-81
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திசைமாறிய பறவைகள்
20-4-81 "AUDREY ROSE"
(Color - Adults only

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
5-வது ஜுவாலை வீசும் வாரமாக,
✶ ரஜனி காந்த் ✶ ஷோபா
✶ ஸ்ரீபிரியா ✶ சுமன்
✶ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
ராஜா யாழ்ப்பாணம் சாந்தி மட்டுநகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30 தினசரி: 1-30, 5-00, 9-30


● பாக்கியராஜ் ● ரதி ● சதஸ்ரீ
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா


# சிறுகதை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வாக, அவளுக்கு வெகுநேரம் பிடித்தது. அவர்சுத்தமான தமிழிலே, நல்ல அழகாய் பேசுகிறார் நாள் முழுக்க அதைக் கேட்டுக்கொண்டே நிற்கலாம் போலிருக்கிறது. அவ்வளவு இனிமையாய். தெளிவான பார்வையோடு பேசுகிறார். அவர் உள்மனதிலிருந்து கரைந்துபோய்ப் பார்க்கின்ற அந்தப் பார்வையில், அவளையே உயிர் எழுதிவைத்துப் பார்த்துக்கொண்டு, அவளுக்காகமிகவும்உணர்ச்சிவசப்பட்டுப்பேசுகிறமாதிரி, அழுகைகுழம்பிய அவர் குரல்பிரலாபங்களைக் கேட்டுக்கொண்டே, மனம் சலித்துப்போய், அவள் தூங்கி வழிகிறாள். ஆனாலும் அவளுக்குச் சுயபிரக்ஞை இன்னும் கெடவில்லை நனவுலக ஊனக் கரிப்புகள் நடுவேபாதி விழித்த கனவு மயக்கத்தில், அவள் குரல் சொப்பனமாய் அவளுக்குக் கேட்டுக்கொண்டிருந்தது. அவள் அதை நம்பமாட்டாள். என்றாலும் கேட்கிறாள்.

நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டு மைக்குக்கு முன்னால் நின்று பளபளக்கிற அவர் தேஜஸ் முகத்தையே மனக் கண்ணில் பார்த்துக் கொண்டு, அவள் இன்னும் தான் விழித்துக்கொண்டிருக்கிறாள். அதுவே அவரின் உண்மை முகம் அப்பால் எங்கோ தொலைவில் இருக்கும் இருட்டைப் பார்த்து, அழுது தீர்க்கிற வெறுமையுடன், அவர் குரல் பால்பொழிந்து கொண்டிருக்கிறது. அவள் இதயம் சலித்துப்போன கனவு மயக்கத்தில் - அந்தப்பாலின் குளிர்ச்சியிலே மனம் குளிர்ந்து போய் மெய்மறந்து அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறாள் அவர் தனக்குத் தெரிந்த வெள்ளைக் குரலில் - ஆவேசிக்கின்ற கலைமுச்சோடு, நிஜ வாழ்வு ஊனங்களையே தடம் புரட்டுகிற மாதிரி - ஓங்கி எழுந்த குரலிலே சொல்கிறார்.

'எனக்கு நிறைய மனதில் ஒரு தாபம் இருக்கிறது. திக்கற்ற பெண் குலத்தின் விமோசன விடுதலைக்காகவே - நான் ஓர் இலட்சியவாதியாய் உழைத்துக்கொண்டிருக்கிறேன். பாவம். - அவர்களை மறுமலர்ச்சி வாழ்க்கையில் வாழவைப்பதற்கு ஒரேவழி; சீதனத்தை ஒழிக்கவேண்டும்- அந்தத் தடை நீங்கிவிட்டால் எல்லாப் பெண்களையுமே நாம் வாழவைக்கமுடியும். அவர்கள் முகங்களை - முழு நிலாப் போன்று நான் தரிசிப்பேன்.

அவருடைய சுய வாழ்வில் இப்படிப் பால்பொழிந்து அவன் பார்த்ததில்லை. அவர் அப்போது மலட்டுப் பசு. மடியைத் தட்டிக் கறக்க முயன்றாலும், பால் வராமல் வெறுமை கனன்ற தீயில் கறக்க வந்த கைகளும் பற்றி எரிந்து போகும். இன்றைக்கு அந்த மலட்டுப் பசுவே ஊரை ஏமாற்றுவதற்காகப் பால் பொழிந்து நலவைக் காக்கிற கருணையுடன் நடித்துவிட்டுப் போகிறது. இந்தமேடைப் பசுவின் பாலை நம்பி நான் குடிக்கமாட்டேன்' என்று தனது கனவு மயக்கத்தில் பிதற்றிக் கொண்டிருக்கிறாள்.

(யாவும் கற்பனை)

# தாள ஒலி கேட்குமே கிளர்ந்து!

நேசமுடன் நீ பேசி நித்தியவா னந்தமாய்ச்
பாசவினை நீக்குபர மாச்சாரி—பேசஇனி
வல்லார்தாம் யாருளரே வான்மீகி கம்பனுமோர்
நல்லார் எனஅறிய நம்.

நல்லையில் ஆதீனம் நல்லாயன் சென்றவழி
தில்லையில் ஞானம் திகழட்டும்—ஒல்லைமணி
கேட்கும்போ தெல்லாம் மணிஐயர் தாளவொலி
கேட்குமே என்றும் கிளர்ந்து

ஸ்ரீ ஜீ. ஜீ லக்ஷ்மிநாராயணசுவாமிஜீ

# கோயில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கோயில் இல்லையேல் நம் இசை, நடனம், சிற்பம் யாவும் மறைந்துவிடும். கோயில்களோடு சார்ந்த கலை இலக்கியம் இரண்டும் நம்மை சீருட்டி, பக்குவப்படுத்தி, பண்பூட்டி இறைவழிப்படுத்துபவை. இறைவன் "உணர்வுசூழ் கடந்தஉணர்வோன்" இங்கு முதல் உணர்வு அறிவு, அறிவின் எல்லை கடந்த உணர்வோன் அவன் பிந்திய உணர்வு பக்தியால் வருவது. தனி அறிவியலின் நுண்மை ஒரு பொழுதும் உணர்வாகாது. இங்குதான் கோயில் நாகரிகம் எம்மைப் பக்குவப்படுத்துகிறது.

எங்கும் ஓடித்திரிந்து இறுதியில் அவை 'புத்தியோகங்கள்'', ''கூற்றுயினவாறு'' நிற்பதனை நாம் எல்லோரும் தவிர்த்தல்வேண்டும்.

''நான் என நிற்கும்ஞானம்
ஞானமன்று: அந்த ஞானம்
மோனமாயிருக்க வொட்டா
மோன மின்றுகவே தான்
தேனென ருசிக்கு மன்பால்
சிந்தை நைந்துருநம்வண்ணம்
வானென நிறைந்தா னந்த
மாகடல் வளைவதின்றே''

—தாயுமானவர்.

நன்றி: 'கோபுரம்'

# விண்வெளியில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இவையனைத்தும் விண்வெளி ஆய்வில் சர்வதேச ஒத்துழைப்பை மேலும் விஸ்தரிப்பதை அவசியமாக்கியுள்ளன. போலந்து ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, கியூபா, வியட்நாம், மங்கோலியா, பல்கேரியா, செக்கோஸ்லவாகியா போன்ற நாடுகள்வரை இவ் ஒத்துழைப்புக்கள் விரிந்துள்ளன. இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில்கூட விண்வெளி ஆய்வில் ஒத்துழைப்பது குறித்து உடன்பாடு காணப்பட்டுள்ளது.

-ராஜி

# ரேவிங் ராஜு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடல் அமைச்சில் சிரேஷ்ட உதவிச்செயலாளராகக் கடமையாற்றினார்.

திரு. குமாரசாமி சிறுவயதிலேயே பொலிஸ்உத்தியோகத்தில் சேரவிருப்பி கொழும்பு சென்றாராம். அங்கு நேர்முகப் பரீட்சை நடத்திய பிரமுகர் இவரது தந்தையை நன்கு அறிந்தவர். அதனால் இந்தச் சிறுவயதிலேயே பொலிஸ் உத்தியோகம் உமக்கு வேண்டாம், உமக்கு வேறு பெரிய பதவிகள் காத்திருக்கின்றன'' என்று கூறித் திருப்பிஅனுப்பிவிட்டாராம். அந்தப்பிரமுகரின் வார்த்தைகள் ராஜுவின் வாழ்வில் மந்திரம்போல் செயல்பட்டு அவரை மிக உன்னதநிலைக்கு இட்டுச்சென்றது என்று கூறலாம். திரு. குமாரசாமி மறையும்போது கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளராகப் பதவிவகித்தார்.

திரு. ராஜு குமாரசாமி தமது மனைவி, ஒரு புத்திரி, ஒரு புதல்வர் ஆகியவர்களை விடுத்துச்சென்றுள்ளார்.

'பெ''

# பரிசு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

கொட்டாஞ்சேனை நல்லாயன் பாடசாலையில் கடந்த ஜனவரி மாதம் மேர்க்கைச, பேச்சு நாடக ஆசிரிய சங்கத்தினரால் நடத்தப்பட்ட அகில இலங்கை ஆங்கில பேச்சுப் போட்டியில், யாழ். பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் கமலநேசன் பொன்னையா மத்திய பிரிவில் இரண்டாம் இடத்தை வகித்து பரிசைப் பெற்றுக்கொண்டார்.


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
மகத்தான 50-வது நாள்





ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
முள்ளும் மலரும்
போன்:881 (கலர்)

வின்ஸர் 5 காட்சிகள்
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப் படுவதால் நேரம் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்.
(யாழ்ப்பாணம்)
விசாரணைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் வீட்டிற்குள் வரும்போது நியாயங்கள் வீதிக்கு வருகின்றன! தாய்க்கு குற்றம் குற்றமே என்று சொன்ன அந்தக் குலமகளே குற்றங்கள் செய்யத் தயாரானாள். அப்போ கோமகன் என்ன செய்தான்? ... பாருங்கள் புரியும்
★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர். விஜயா
✶ தேங்காய் சீனிவாசன் ✶ மனோரமா ✶ சுந்தரராஜன்
✶ சுருளிராஜன் மற்றும் பலர் திறம்பட நடித்த
"ரிஷிமூலம்"
டைரக்ஷன் எஸ் பி. முத்துராமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
WINTER KILLS

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
பெரியஇடத்து பெண்

வெலிங்டன்
வெஸ்லி
(சாவகச்சேரி)
தினசரி 6-15, 9-30,
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சுஜாதா
தீபம்
(புதிய பிரதி-ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். -லதா
மீனவநண்பன்

கல்வனைஸ்ட் நெளிவுள்ள
கூரைத்தகடுகள்

25 U S G 32 U S G
நீளம் 6 அடி முதல் 10 அடிவரை
ஐ சி பெயின்ற் வகைகள்

**கதிர் ஹாட்வெயர்ஸ்**
(TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7130


# ரூ. 50 ஆயிரம் கடத்தல் சாரங்கள்

(யாழ்ப்பாணம்)

50 ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் சாரங்கள் யாழ். நகரிலுள்ள இல்லமொன்றிலிருந்து கைப்பற்றப்பட்டன.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் சி யோகசூமாரி தலைமையிலான பொலிஸ் கோஷ்டி யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியிலுள்ள வீடொன்றில் இக்கடத்தல்சாரங்களைக் கைப்பற்றியது. இதனை அடுத்து தம்பிமுத்து சரஸ்வதி, கந்தையா பூபாலசிங்கம் ஆகிய இருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. (இ)


சுவையான சுத்தமான
சைவ உணவு
வகைகளுக்கும்
**என். ஆர். எம்.**
அரிசி வகைகளுக்கும்
**அசோக் பவான்**
112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8095
உங்கள் பயணத்திற்கு
வாசன்ஸ் பயணச் சேவையை
நாடுங்கள்


### யாழ். புற்றுநோய்
# சிகிச்சை நிலையத்திற்கு நிதி சேகரிக்கவில்லை
### ஸ்தாபக சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்கென தனிப்பட்ட சிலரும், ஸ்தாபனங்களும் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்திப் பணம் சேர்ப்பதற்கு டிக்கட்டுகள் விற்பனை செய்துவருவதாக தங்கள் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும், இப்படியான பணவசூலுக்கும் தங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும் யாழ்ப்பாண புற்றுநோய் சிகிச்சை நிலையஸ்தாபக சபையின் இணைச்செயலாளர்களில் ஒருவரானடாக்டர் எஸ். சபாரட்னம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண புற்றுநோய் சிகிச்சை நிலைய ஸ்தாபகசபையில் ரோட்டரிக்கழகம், லயன்ஸ்கழகம் வைஸ்மன்கிளப், வட இலங்கை புற்றுநோய்ச் சங்கம் ஆகியவை அங்கம் வகிக்கின்றன.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை தகுதிவாய்ந்த அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் இதன் தலைவராக இருக்கிறார். டாக்டர் எஸ் சபாரத்தினமும் டாக்டர் எஸ். சேனாதிராசாவும் இணைச்செயலாளராக இருக்கின்றனர். டாக்டர் எம். சுந்தரலிங்கம் இதன் பொருளாளராக இருக்கின்றார்.

புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கான பண உதவிகள் கொடுப்பவர்கள் இந்தச் சபைக்கே வழங்கவேண்டுமென்றும் வேறுவிதமாகச் சேகரிக்கப்படும் பணத்திற்குத் தமது ஸ்தாபனம் பொறுப்பேற்க முடியாது என்றும் திரு. சபாரத்தினம் மேலும் தெரிவித்தார்.


**உங்கள் முதலீட்டிற்கு**

**27% வட்டி**

நாங்கள் வழங்குகின்றோம்

அத்துடன் உங்களுக்கு

✯ ஆயுள் காப்புறுதி இனும்
✯ வீட்டுப்பாவனைப் பொருட்கள்
(பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)

நாம் உங்களுக்கு 41 வருடங்களாக சேவை செய்து வருகின்றோம் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றோம்.

★ நம்பிக்கை
★ பாதுகாப்பு
★ ஸ்திரத்தன்மை

TFC த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்
191-249/c மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம் போன் :- 7680

13-4-1981 முதல் 19-4-1981 வரை எமது அலுவலகம் திறக்கப்படமாட்டாதென் பதை அறியத்தருகின்றோம். எனினும் வாடிக்கையாளர்கள் நன்மை கருதி அவர்களது வட்டிக் கொடுப்பனவு காசோலை மூலம் அனுப்பிவைக்கப்படும்.


## பரமாசாரிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பணியைத் தொடங்கி இப்பொழுது 45 வருடங்கள் கடந்தவிட்டன. இயல் இசை ஆகிய துறைகளிலும் சொற்பெருக்காற்றுவதிலும் மாத்திரமன்றி சித்திரம் வரைவதிலும் அவர் கைதேர்ந்தவர்.

சுவாமிகளுக்கு ஆதீனசிவாச்சாரியார்களும் இளவரசு ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரானும் சமாதிப் பூசைகளையும் அபிஷேகங்களையும் நடாத்தி முக்கோணவடிவில் அமைத்த கிடங்கில் பிரசங்கம் நடத்திக் கொண்டிருக்கும்போது இருப்பதுபோல் அப்படியானதிருவுருவத்துடன் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் சமாதி வைக்கப்பட்டார்.

சுவாமிகளின் பரிபூரணத்துவச்செய்தி கேட்டதும் யாழ் நகரின் பல்வேறு இடங்களிலுமுள்ள சமயப்பிரமுகர்கள், கலைஞர்கள், நாதஸ்வரவித்துவான்கள், பொதுமக்கள் எல்லோரும் ஆதீனத்துக்குச் சென்று சுவாமிகளுடைய திருவுருவத்தை வணங்கிச்சென்றனர்,

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன், சாவகச்சேரி எம். பி. திரு வி. என், நவரத்தினம், யாழ்நகர மேயர் திரு. இராசா விசுவநாதன் மாநகரசபை உறுப்பினர்கள், வடபிராந்திய போக்குவரத்துச்சபை தகுதிவாய்ந்த அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் முஸ்லிம் பிரமுகர் மௌலவி முகைதீன்பிச்சை உட்பட இன்னும் பல பிரமுகர்களும், ஏராளமான பொதுமக்களும் சுவாமியின் திருவுருவத்துக்கு அஞ்சலி செலுத்தினர்கள். (சி)

## குட்டிமணிக்கு....;

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் கொலை, கொலைச் சம்பவங்களில் இவர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

குட்டிமணிதற்போது விசாரணைக் குட்படுத்தப்பட்டிருப்பதால்மேலும் பலபுதிய தகவல்கள்கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஈ)


### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஹொண்டா 90 CC மோட்டார் சைக்கிள் (ரீகொண்டிசன்ட்) விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க; 28, கொன்வென்ற் (Convent) வீதி யாழ்ப்பாணம்.


## நாட்டிய நிகழ்ச்சி



யாழ்ப்பாணம் கலைமன்றம் அளிக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சியொன்று எதிர்வரும் 16ந் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 6-30 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. இந்நிகழ்ச்சியினை கண்டி பெரியாஸ்பத்திரி வைத்திய கலாநிதி ஜெயராஜன் இராசையாவும் அவரது சகோதரி செல்வி பத்மா இராசையாவும் இணைந்து அளிக்கின்றனர். இவர்கள் அண்மையில் அமெரிக்கா சென்று பல நிகழ்ச்சிகளை நடாத்தி வெற்றியுடன் திரும்பினர். ஜெயா—பத்மா இருவரும் தோன்றும் ஒரு கட்டத்தை படத்திலே காணலாம்.


**வாடகைக்கு அல்லது குத்தகைக்கு**
பரமேஸ்வரா கல்லூரி சந்தியில்
பலசரக்கு, தேநீர் கடைகளுக்கு ஏற்றது:

**த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்**
249/C, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7680


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் ஏகாம்பரம்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் ஏகாம்பரம்(Ex-Works Manager Jaffna College and Proprietor Modern Electricals, Jaffna காலமானார். இவர் இந்திராதேவியின் கணவராவார். ஈமக்கிரிகைகள் இன்று (12-4 81) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

8869

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீ 3, 63-ம் [illegible] ஏப்ரல் 12 ம் திகதி வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No [illegible] The Eelanadu [illegible] Telegram "Eelanadu" Phone: [illegible]